விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 27 சனிக்கிழமை (12.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 268

## தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர்

# பதவியைத் துறந்தார் துரைராஜசிங்கம்

### தனிப்பட்ட காரணங்கள் என சம்பந்தன் மற்றும் மாவைக்கு கடிதம்



(மட்டக்களப்பு)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரை ராஜசிங்கம் தன் தனிப்பட்ட காரணங்களுக்காகவும் சுயவிருப்புடனும் தன் பொதுச் செயலாளர் பதவியைத் துறப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் பின்னர் தேசியப் பட்டியல் விவகாரத்தில், சுமந்திரன் தரப்புடன் இணைந்து சதியில் ஈடுபட்டதன் பின்னணியில் இப்பதவி விலகல் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

23

---

யாழ்.சீனியர் வீதியில்

## வாள்வெட்டுக் குழு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சீனியர் வீதியில் உள்ள வீடொன்றின் மீது வாள் வெட்டுக் குழு தாக்குதல் நடத்தியிருக்கின்றது.

பிரபல பாடசாலை ஒன்றின் மாணவன் ஒருவரின் வீட்டின் மீதே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்

23

---

வயோதிபப் பெண்ணை

## ஏமாற்றி இரு மோதிரங்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

தனிமையில் வாழ்ந்த வயோதிபப் பெண்ணிடம் லாவகமாக பேசி இரு தங்க மோதிரங்களை எடுத்து சென்ற மீன் வியாபாரி தொடர்பில்

23

---

மாகாண சபைத் தேர்தல்

## கட்டாயம் நடத்தப்படும்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் கட்டாயம் நடத்தப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான தன்னிடம் உறுதியளித்துள்ளதாக சோமவங்ச கோதாகொட தெரிவித்துள்

23

---

### அரசின் செயற்பாடுகள் அதிருப்தியளிக்கின்றன

## சிங்கள தேசிய அமைப்புகள் ஒன்றியம் ராஜபக்ஷாக்களுக்கு எதிராகப் போர்க்கொடி

(கொழும்பு)

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு முன்னெடுக்கும் ஒரு சில செயற்பாடுகள் அதிருப்தியளிக்கின்றன" இவ்வாறு சிங்கள தேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமரசேகர நேற்று தெரிவித்தார்.

தவறுகளை ராஜபக்ஷ அரசு உடனடியாகத் திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பல்வேறு எதிர்பார்ப்புக்களை கொண்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

ஆனால், இந்த அரசு தற்போது முன்னெடுக்கும் ஒரு சில செயற்பாடுகள் அதிருப்தியளிப்பவையாக அமைகின்றன.

குறிப்பாக அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தைக் குறிப்பிட வேண்டும்.

நாட்டு மக்களுக்கும் நாட்டுக்கும் பொருந்தும் விதத்தில் அரசமைப்பைத்

23

---

## அரச காணியில் குடியிருப்போருக்கு நிரந்தர காணிப் பத்திரம் பெற வாய்ப்பு

### வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

(கொழும்பு)

ஆவணங்கள் எவையுமின்றி அரச காணிகளை அபிவிருத்தி செய்து அல்லது அவற்றில் குடியிருந்துவரும் மக்களுக்கு அக்காணிகளுக்கான சட்ட ரீதியான ஆவணங்களை வழங்குவது தொடர்பான அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை கம்பஹா மற்றும் கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்காக விண்ணப்பிப்பதற்குரிய மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் வழிகாட்டு நெறிகளை உள்ளடக்

23

---

யாழ்.சுண்டுக்குளி பகுதியில்

## வீடொன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத குழு அட்டகாசம்

### வாகனங்கள், தளபாடங்கள் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த வன்முறைக் கும்பல் வீட்டில் நிறுத்தி வைக்கப்

23

---

## குண்டுச் சத்தங்களால் அதிர்ந்தது யாழ்ப்பாணம்

### அச்சம் தேவையில்லை என இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரத்தை அண்டிய பகுதிகளில் நேற்று திடீரென கேட்ட தொடர் குண்டு வெடிப்புச் சத்தங்களால் மக்கள் மத்தியில் இலேசான பதற்றம் தென்பட்டது.

நீண்டகாலத்தின்

23

---

ஹெரோயினுடன்

## கோண்டாவிலில் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் மேற்குப்பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளை வீட்டிற்குள் உடைமையில் வைத்திருந்தனர் என்ற

23

---

## நீதியை செயற்படுத்துவதில் இலங்கை தோல்வி

### ஐ.நா சிறப்பு அறிக்கையாளர்


(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் நிலைமாறுகால நீதியை செயற்படுத்துவதில் முழுமையாகத் தோல்வியடைந்துள்ளது என்று உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீளநிகழாமையை உறுதிப்படுத்துவதற்கான ஐ.நாவின் முன்னாள் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிறீப் தெரி

23

# வடக்கு - கிழக்கு தமிழர் பகுதிகளில் முதலீடுகளை அதிகரிக்க முன்வாருங்கள்

## கனடா தமிழ் முதலீட்டாளர்களிடம் பிரதமர் வலியுறுத்து



(கொழும்பு)

**வடக்கு - கிழக்கு தமிழர் பகுதிகளில் முதலீடுகளை அதிகரிக்க முன்வருமாறு கனடா தமிழ் முதலீட்டாளர்களிடம் பிரதமர் மகிந்த வலியுறுத்தியுள்ளார்.**

வடக்கு - கிழக்கில் இருக்கக்கூடிய முதலீடுகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் வகையிலும் இந்தச் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கனடாவில் இருக்கக்கூடிய முதலீட்டாளர்களான சுகந்தன் சண்முகநாதன் மற்றும் சதீஸ் ராஜலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பனை அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து சில வேலைத்திட்டங்களை செய்து வரக்கூடிய குறித்த இரண்டு முதலீட்டாளர்களும் வடக்கு - கிழக்கு மக்களை தொழில் ரீதியாக உள்வாங்கியதற்காகப் பிரதமர் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் கடற்தொழில் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்துகொண்டார்.

இதன்போது பிரதமர் மகிந்த, நாட்டில் உள்ள சூழ்நிலையில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தங்களின் முதலீடுகளை ஊக்கப் படுத்தி, அங்கு இருக்கக்கூடிய மக்களுக்குத் தொழில் வாய்ப்புகளை அதிகரித்துக் கொடுப்பதனூடாக அப்பகுதிகளில் தனியார் நிறுவனங்களை வெகுவிரைவில் அதிகரிக்க வேண்டும் எனவும், அம்முயற்சிக்குத் தான் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார். (ம-03)

## 22 பாரதூரமான ஏற்பாடுகள்

# 20 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது

## பப்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தில் 22 பாரதூரமான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆளும் தரப்பின் உறுப்பினர்கள், எதிர்தரப்பின் உறுப்பினர்கள் திருத்தத்திற்கு ஆதரவு வழங்க கையுயர்த்த முன்னர் திருத்தத்தில் உள்ளடக்கபபட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து முழுமையாக தெளிவு பெற வேண்டும்.

அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டை துறந்து நாட்டுக்காகவும், பாராளுமன்றத்தின் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என பப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராட்சி கோரிக்கை விடுத்துள்ளார்.

பப்ரல் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அரசாங்கம் ஆட்சியமைத்தவுடன் கொள்கைக்கு அமைய செயற்படுவதும், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதும் அவசியமாகும் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். கொள்கைத்திட்டத்தை செயற்படுத்தும் போது எழும் முரண்பாடுகளுக்கு பேச்சுவாத்தையின் ஊடாக தீர்வு காண வேண்டும். அதுவே ஜனநாயகமாக அரசாங்கத்தின் இலட்சணமாகும்.

ஜனாதிபதி தேர்தலின் வெற்றியை தொடர்ந்து நாட்டு மக்கள் அரசியல் கட்சி வேறுப்பாடுகளின்றி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் செயற்பாடுகளை ஏற்றுக் கொண்டார்கள். இதுவே ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கடந்த மாதம் (ஓகஸ்ட்) பொதுத்தேர்தலில் அமோக வெற்றிப் பெறுவதற்கு பிரதான காரணியாக அமைந்தது. அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் சட்ட மூல வரைபில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு சில ஏற்பாடுகள் அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை கேள்விக்குட்படுத்தியுள்ளது என்பது எமது நிலைப்பாடாகும்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை இரத்து செய்வதாக ஆளும் தரப்பினர் இடம்பெற்று முடிந்த இரண்டு பிரதான தேசிய தேர்தல்களில் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்கள். மக்களின் ஆணையின் பிரகாரம் 19 ஆவது திருத்தம் இரத்து செய்யப்பட வேண்டும். 20 ஆவது திருத்தம் உருவாக்கப்படும் போது மக்களின் அபிப்ராயங்கள் குறித்து மிக கவனமாக ஆராயப்பட வேண்டும். இவ்வாறான தன்மை செயற்படுத்தப்பட்டால் மாத்திரமே அரசியமைப்பு திருத்தம் சிறந்ததாக காணப்படும். அத்துடன் அரச நிர்வாகமும் சிறந்த முறையில் அமையும்.

ஆளும் தரப்பின் உறுப்பினர்கள், எதிர்கட்சியின் உறுப்பினர்கள் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவதற்கு முன்னர் திருத்தம் தொடர்பில் பலமுறை பரிசீலனை செய்ய வேண்டும். மக்களின் ஜனநாயகத்தை பாதுகாக்கும் மக்கள் பிரதிநிதிகள் தங்களின் அரசியல் கட்சிகளின் தேவைகளை துறந்து நாட்டின் எதிர்காலம் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். ஜனநாயகத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஏற்பாடுகள் அனைத்து மட்ட பேச்சுவார்த்தை ஊடாக திருத்தம் செய்யப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தின் 22 ஏற்பாடுகளை பப்ரல் அமைப்பு மிகவும் பாரதூரமான ஏற்பாடாக அடையாளப்படுத்தியுள்ளது. சுயாதீனமாக செயற்பட வேண்டிய நிறுவனங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. விசேடமாக தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் நியமனம், தேர்தல் காலத்தில் அரச சேவைக்கான நியமனம் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்கான அதிகாரங்கள் நீக்கப்பட்டுள்ளமை பாரதூரமான செயற்பாடாகும்.

அத்துடன் அரசியலமைப்பின் 154 ஆவது பிரிவுக்கு அமைய அரச நிறுவனங்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காளர் நாயகத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரம் இரத்து செய்யப்படவுள்ளது. இதனால் அரச நிர்வாகம் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு உள்ள அதிகாரம் இல்லாதொழிக்கப்படும். அத்துடன் இலங்கை விமான சேவைகள் நிறுவனம், லிட்ரோ நிறுவனம், சீனி நிறுவனம் மின்சார வழங்கல் நிறுவனம் ஆகிய நிறுவனங்கள், 100 அரச நிறுவனங்கள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு உள்ள அதிகாரம் 20ஆவது திருத்தத்தினால் இரத்து செய்யப்படலாம்.

தேசிய பெறுகை ஆணைக்குழு நீக்கம் பாராளுமன்றத்துக்கு ஜனாதிபதி பொறுப்பு கூறத் தேவையில்லை. அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரித்தல், பாராளுமன்றம் 1 வருடத்துக்கு பிறகு ஜனாதிபதி விரும்பும் போது கலைத்தல், இரட்டை குடியுரிமை உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிடலாம் ஆகிய விடயங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியுள்ளோம்.

நாட்டுக்கான சட்டம் இயற்றும் போது பின்பற்ற வேண்டிய விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவதானம் செலு த்த வேண்டும். ஆளும் தரப்பினரும், எதிர் தரப்பினரும் அரசியல் கட்சி நிலைப் பாடுகளை துறந்து 20 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பாதக ஏற்பாடுகளை பகிரங்கமாக சுட்டிக்காட்டி திருத்திக் கொள்ள ஒத்துழைக்க வேண்டும்.

அரசியலைப்பின் 18ஆவது திருத்தத்தை நிறைவேற்ற ஆதரவு வழங்கிய பாராளு மன்ற உறுப்பினர்கள் பின்னர் மக்களிடம் மன்னிப்பு கோரினார்கள். 19ஆவது திருத்தத்தை ஒரு பாராளு மன்ற உறுப்பினர்தவிர ஏனைய உறுப்பினர்கள் அனை வரும் ஏற்றுக் கொண்டு ஆதரவு வழங்கி னார்கள். இன்று மீண்டும் புதிய திருத்தம் நிறைவேற்றப்படவுள்ளது . இவ்வாறான நிலையில் நாட்டின் எதிர்காலம், பாராளுமன்றின் ஜனநாயகம் குறித்து பாராளுமன்ற உறுப் பினர்கள் அவதானம் செலுத்த வேண்டும். (ம-03)

## 20 ஆம் திருத்தம் தொடர்பில் ஆராய

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விசேட குழுவை நியமித்தது

(கொழும்பு)

உத்தேச 20ஆம் திருத்தச் சட்டம் குறித்து ஆராய்வதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விசேட குழுவொன்றை நியமித்துள்ளது.

விசேட குழுவொன்றை நியமித்து இந்த உத்தேச திருத்தச் சட்டத்தின் நன்மை, தீமைகள் குறித்து ஆராயப் படுவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தக் குழு, உத்தேச 20ஆம் திருத்தச் சட்டம் குறித்த அறிக்கையை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் அதன் நிறைவேற்று குழுவிற்கும் சமர்ப்பிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

சட்டத்தை அமுலாக்குவதில் காலதாமதம் ஏற்படுவது தொடர்பில் அரசியல் சாசனத்தின் சில குறைபாடுகள் குறித்தும் இந்த விசேட குழு ஆராய உள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-03)

# நாணயப் புழக்கம் இலத்திரனியலில் இருக்க உண்டியலில் சில்லறை சேர்க்கிறது அரசு

## சாடுகிறார் சம்பிக்க

(கொழும்பு)

இந்த அரசாங்கத்தினால் சர்வதேச கடன் விடயங்களை இனியும் கையாள முடியாது. இந்த அரசாங்கம் கடனுக்கான வட்டியை கூட கட்ட முடியாத நெருக்கடியில் உள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் 900 பில்லியன் ரூபாய்களை கடனுக்கான வட்டியாக செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் இந்த அரசாங்கத்தினால் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான சர்வதேச கடன்களையோ அதற்கான வட்டியையோ செலுத்த முடியாது என எதிர்க்கட்சி உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற உற்பத்தி, சுங்க, துறைமுக வரிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் நாட்டினை அபிவிருத்தி செய்வதாக கூறுகின்றனர். ஆனால் அடுத்த இரண்டு-மூன்று ஆண்டுகளுக்கு நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்கும் நிலைமையில் அரசாங்கம் இல்லை. அதிவேக வீதிகளையோ, மேம்பாலங்களையோ அரசாங்கத்தினால் உருவாக்க முடியாது. அரசாங்கத்தின் நிலைமை எவ்வாறானது என்றால், நாட்டின் மொத்தக் கடனில் இந்த ஆண்டுக்கான வட்டியாக செலுத்த வேண்டியுள்ள 900 பில்லியன் ரூபாவைக்கூட செலுத்த முடியாத நிலையில் தடுமாறுகின்றது.

2020-2026 ஆம் ஆண்டுகளில் நாட்டின் வெளிநாட்டுக் கடன் மிகப்பெரிய நெருக்கடியை கொடுக்கப்போகின்றது. வெளிநாட்டுக் கடன்களை இனியும் எம்மால் பெற முடியாது. எமக்கான அங்கீகாரம் குறைந்துகொண்டே போகின்றது. எமது பொருளாதாரத்தை மீட்டெடுக்க நாம் கடுமையாக சிரமப்பட வேண்டியுள்ளது.

கொவிட் வைரஸிற்குப் பின்னர் பொருளாதாரம் நேர் எதிர்தன்மையில் பயணிக்கின்றது. எனவே அடுத்த மூன்று மாத காலத்திற்கான பொருளாதார தன்மையை பார்த்தால் பாரிய வீழ்ச்சியையே காட்டும். எனவே நேர் பொருளாதாரத்தை மீட்டெடுக்க என்ன செய்வது என்பது குறித்து சிந்திக்க வேண்டும். கடனில் இருந்து மீளவேண்டும். ஆனால் நாம் சர்வதேச நிறுவனங்களை நிராகரித்து, சட்டத்திற்கு எதிராக நிதி விடயங்களை கையாண்டால் சர்வதேச நிதி நிறுவனங்கள் எம்மை கைவிடும். இந்த அச்சுறுத்தல் எமக்கு இப்போதே ஏற்பட்டுள்ளது.

70 ஆண்டுகளாக நாம் கடன்களை பெற்று வருகின்றோம். ஆனால் எந்தவொரு அரசாங்கமும் கடன்களை மீள செலுத்த தவறவில்லை. எனவே முடிந்தால் அடுத்த இரண்டு ஆண்டுகளில் சர்வதேச கடன்களை கட்டினால் போதும். ஆனால் இது ஒரு சவாலாக அரசாங்கத்திற்கு இருக்கும். ஏனென்றால் இந்த அரசாங்கத்தினால் சர்வதேச கடன் விடயங்களை இனியும் கையாள முடியாது.

நாம் கடந்த ஐந்து ஆண்டுகளில் சர்வதேச கடன்களை சரியாக செலுத்தி வந்துள்ளோம். ஆனால் இந்த அரசாங்கம் கடனுக்கான வட்டியை கூட கட்ட முடியாத நெருக்கடியில் விழும். எமது நிதியில் தான் இந்த தேசிய பொருளாதாரத்தை உருவாக்குவதாக கூறிக்கொண்டு நாட்டினை பின்னோக்கி கொண்டு செல்கின்றனர். இலத்திரனியல் நாணயப் புழக்கத்தில் இருக்கின்ற நிலையில் உண்டியலில் சில்லறை சேர்க்க கூறும் ஆட்சியே உள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளின்கடனை முடிந்தால் கட்டிக்காட்டுங்கள் என அவர் ஆளும் கட்சிக்கு சவால் விடுத்தார். (2-7)

# கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதற்கமைய, வாராந்தம் ஊடகவியலாளர் சந்திப்புகளை ஏற்படுத்தி தொற்று நோயியல் பிரிவு உள்ளிட்ட அனைத்து பொறுப்புள்ள நிறுவனங்களின் அறிவுரைகளை பெறுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த ஊடகவியலாளர் சந்திப்பு எதிர்வரும் வாரம் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டு மக்கள் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்துவதில்லை எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளதுடன் இந்த நடவடிக்கையானது நாட்டுக்கு நல்லதல்ல எனவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவால் தடுப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் வலியுறுத்தியுள்ளார். (2-7)

# கோரிக்கை முன்வைக்கப்பட்டால் பொறுப்பை ஏற்கத் தயார்

## ஐ.தே.க.தலைமை குறித்து மங்கள

(கொழும்பு)

கோரிக்கை முன்வைக்கப்படுமானால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தயாரென முன்னாள் பாராளுன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நேற்று அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்த பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், தாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகப் போவதில்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் கோரிக்கை முன்வைக்கப்படுமானால், அது குறித்து கவனம் செலுத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். (ஐ-6)

# ஆவணங்களின்றி அரச காணிகளில் குடியிருப்பவர்களிற்கான அறிவிப்பு!

(கொழும்பு)

ஆவணங்கள் எவையுமின்றி அரச காணிகளை அபிவிருத்தி செய்து அல்லது அவற்றில் குடியிருந்துவரும் மக்களுக்கு அக்காணிகளுக்கான சட்ட ரீதியான ஆவணங்களை வழங்குவது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதற்காக விண்ணப்பிப்பதற்குரிய மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் வழிகாட்டு நெறிகளை உள்ளடக்கிய மேற்படி வர்த்தமானி அறிவித்தல் காணி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான காணிக் கச்சேரி 2020.11.01 ஆம் திகதியில் இருந்து 2020.11.21ஆம் திகதிக்கிடையில் இயைபுடைய பிரதேசத்தின் பிரதேச செயலாளர் தீர்மானிக்கின்ற திகதியில் நடத்தப்படும் என்றும் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிரந்தர வீடுகளை நிர்மாணிக்க அரசு நிலங்களைப் பயன்படுத்துபவர்களுக்கும், விவசாயம் அல்லது எந்தவொரு அபிவிருத்தி நோக்கங்களுக்கும் காணியைப் பயன்படுத்துபவர்கள் இந்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களைத் தவிர முழு நாட்டிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் படி தயாரிக்கப்பட்ட முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# தொண்டமானின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அரசாங்கம் தயார்

(கொழும்பு)





மறைந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு முன்னின்று செயலாற்றத் தயாராக உள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அனுதாபப் பிரேரணை முன்வைத்து சபையில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆறுமுகன் தொண்டமான் தனது இறுதிக் தருணத்திலும் பெருந்தோட்ட மக்கள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தார். நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு தீவிரவாதத்திற்கு இடமளிக்காது செயற்பட்டிருந்தார். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை பிளவுபடுத்தும் செயற்பாடுகளுக்கெதிராகவே ஆறுமுகன் தொண்டமான் செயற்பட்டிருந்தார். இந்நிலையில் மறைந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் குடும்பத்தினருக்கு தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாக தெரிவித்தார். (ஐ-6)

# எம்மை விமர்சிப்பதை விடுத்து வீழ்ச்சியிலிருந்து மீள சிந்தியுங்கள்

## எதிர்க்கட்சியினரிடம் விமல் வேண்டுகோள்



(கொழும்பு)

**எம்மை விமர்சிக்காது ஏற்பட்ட வீழ்ச்சியில் இருந்து மீள என்ன செய்வதென்று சிந்தியுங்கள் என எதிர்க் கட்சியினரிடம் விமல் வீரவன்ச வேண்டுகோள் விடுத்தார்.**

நாட்டினை சகல விதங்களிலும் நாசமாக்கி மீண்டும் பயங்கரவாதத்தை உருவாக்கியவர்கள் இன்று எமக்கு பாடம் கற்பிக்க நினைக்கின்றனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற உற்பத்தி, சுங்க, துறைமுக வரிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் எதிர்க்கட்சியினர் கூறிய பழைய கதையை மீண்டும் இன்று கூற ஆரம்பித்துள்ளனர். குடும்ப ஆட்சி உருவாகின்றது எனக் கூறி மக்களை ஏமாற்றி ரணில்-மைத்திரி ஆட்சியை உருவாக்கியதுடன், வடக்கு,கிழக்கிற்கு சமஷ்டிகிடைக்கும் என கதைகளைக் கூறி உருவாக்கிய ஆட்சியில் மத்திய வங்கி கொள்ளையடிக்கப்பட்டது. பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கியது. சாதாரண மக்களின் வாழ்க்கையை நாசமாக்கி, புலனாய்வு துறையை அவமதித்து, தற்கொலை தாக்குதலை ரசித்தவர்கள் இனியும் வேண்டாம் எனக் கூறியே எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையில் ஆட்சியை கொடுத்துள்ளனர்.

இவர்களின் இன்றைய நிலையைப் பார்த்தால் பரிதாபமாக உள்ளது.

குண்டுவெடிப்பு நடக்கும் வரையில் நாட்டினை ஆட்சி செய்தவர்கள், தேசிய உற்பத்தியை வீழ்த்தும் வரையில் ஆட்சி செய்தவர்கள், சர்வதேச வேலைத்திட்டங்களுக்கு ஆட்சி செய்தவர்கள் எமக்கு ஆட்சி செய்வது எப்படி என்ற பாடம் கற்பிக்க நினைக்கின்றனர்.

இவர்கள் இருக்கும்வேளையில் கொரோனா வந்திருந்தால் இந்தியாவை விட மோசமான நாடாக இலங்கை மாறியிருக்கும். இன்று எமது ஆட்சியில் கொரோனா சவால்களை வெற்றி கொண்டமைக்காக சர்வதேச சுகாதார நிறுவனங்கள் புகழாரம் சூட்டுகின்றனர்.

எனவே எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் நாம் கேட்டுக் கொள்வது ஒன்று மட்டுமே. எம்மை விமர்சிக்காது உங்களுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியில் இருந்து மீள என்ன செய்வது என சிந்தியுங்கள் எனத் தெரிவித்தார். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 3<br>கி.பா: 35 செவ் 7 இல் உயரம்: 6'<br>தகைமை/தொழில்: NDT, Technical Officer (Gov)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11190 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 69 செவ் 10 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டவர் மட்டும்<br>தொ.இ: G/9133 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 33 செவ் 5 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. சொந்தமாகக் கடை வைத்திருக்கின்றார்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11191 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 2<br>கி.பா: 40 செவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகன்<br>தொ.இ: G/9135 |
| பிறப்பு: 1990 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: செவ் 6 இல் உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.தச்சுத் தொழிலக உரிமையாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் கிறிஸ்தவத்திற்கு மாறுவதாயின் இந்து சமயத்தவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/11192 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 42 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்<br>தொ.இ: G/9144 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா: செவ் 7 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. வெல்டிங் (நிரந்தரம்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11194 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 14 3/4 சூரி,செவ் 5 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:பட்டதாரி. அரச வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்<br>தொ.இ: G/9139 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## பயன்படுத்தப்பட்ட முகக் கவசங்களை சலவை செய்து விற்பனை செய்த கும்பல்

### சுற்றிவளைப்பில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட முகக் கவசங்கள் கைப்பற்றல்

(கொழும்பு)

ஏலவே பயன்படுத்தப்பட்ட முகக்கவசங்களை சலவை செய்து விற்பனை செய்யும் மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டைப் பகுதியில் மக்கள் பாவனையின் பின்னர் வீசப்பட்ட முகக்கவசங்களை சலவை செய்து மீள விற்பனை செய்வது தொடர்பில் கொழும்பு சுகாதார அதிகாரிக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட முகக்கவசங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் கொழும்புக் கோட்டையின் மற்றுமோர் பகுதியில் சலவை செய்யப்பட்டு உலர வைக்கப்பட்ட ஒரு தொகை முகக்கவசங்கள் மீட்கப்பட்டதுடன் அதனை உலர வைத்து விற்பனை செய்யத் தயாரான நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மாளிகாகந்த நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். (ஜ-6)

## மறு அறிவித்தல் வரை பார்வையாளர் பகுதி மூடல்

(கொழும்பு)

பாராளுமன்ற பார்வையாளர்கள் பகுதியைத் தற்காலிகமாக மூடி வைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

கொவிட் - 19 அச்சம் காரணமாக சுகாதார அதிகாரிகள் பிறப்பித்த வழிகாட்டல்களுக்கு அமைவாக மறு அறிவிப்பு வரும் வரையில் பார்வையாளர்கள் பகுதியை மூடி வைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் பாராளுமன்றில் நேற்று தெரிவித்தார். (ஜ-4)

## ஜோன்ஸ்டனின் விசாரணை பிற்போடல்



(கொழும்பு)

சதொச நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு தொடர்பில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள வழக்கு மீதான விசாரணை பிற்போடப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரட்ன முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளதாக நீதவான் உத்தரவிட்டார். (ஜ-4)

# செம்மணியில்

# பெருந்தொகையான மருத்துவக் கழிவுகள் கொட்டுவதை எதிர்த்துப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம், செம்மணி பகுதியில் பெருமளவு மருத்துவ கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன. இதற்கு எதிராக நல்லூர் பிரதேசசபை உறுப்பினர்கள் நேற்று ஏ-9 வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



இதனால் சிறிது நேரம் ஏ-9 வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது. செம்மணி பகுதியில் கிடங்கு தோண்டி பெருமளவு மருத்துவ கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன. இந்த தகவலையடுத்து, நல்லூர் பிரதேசசபை உறுப்பினர்கள் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர். இந்த செயலை கண்டித்து, நல்லூர் பிரதேசசபை உறுப்பினர்கள் ஏ-9 வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 20 நிமிடங்கள் வீதி மறிக்கப்பட்டு போராட்டம் நடைபெற்றது. இதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றை நாடுவது என்ற முடிவுக்கமைய போராட்டக்காரர்கள் வீதி மறியலை கைவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்று சென்றனர். (4-5-8)

# பெற்றோர்களே! உங்கள் விருப்பு வெறுப்புக்களை பிள்ளைகள் மீது திணிக்காதீர்கள்-வேலன் சுவாமிகள்

(குப்பிழான்)

வைத்தியர், பொறியியலாளராக எனது பிள்ளை வர வேண்டுமென எல்லாப் பெற்றோர்களும் நினைப்பது தவறு. தங்கள் விருப்புக்களைப் பிள்ளைகள் மீது திணிப்பதைப் பெற்றோர்கள் கைவிட வேண்டும் என நல்லூர் தவத்திரு வேலன் சுவாமிகள் பெற்றோர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

கொக்குவில் யாழ்.விஷன் கிருஷ்ணா அறநெறிப்பாடசாலையின் கிருஷ்ண ஜெயந்தி விழா கடந்த புதன்கிழமை பிற்பகல் கொக்குவில் கிழக்கு கோணாவளை வீதியிலுள்ள கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையில் சிறப்பாக இடம்பெற்றது.

மேற்படி விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிள்ளைகளுக்கென உள்ள தனித் திறமைகளையும், இயல்பான நாட்டத்தையும் பெற்றோர்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். ஒவ்வொரு பிள்ளைகளிடத்திலும் உள்ள திறமைகளை இனம் காண வேண்டியது பெற்றோர்கள், ஆசிரியர்களின் பொறுப்பு.

பிள்ளைகள் ஆர்வம் காட்டும் துறையை இனம் கண்டு அந்தத் துறையில் அவர்களைச் சரியாக வழிப்படுத்தினால் நிச்சயமாக அவர்கள் நற்பிரஜைகளாக, நாளைய தலைவர்களாகத் திகழ்வார்கள்.

தங்கள் பிள்ளைகளைப் பராமரித்து, நல் விழுமியங்களை ஊட்டி நற்பிரஜைகளாக உருவாக்க வேண்டிய கடமை பெற்றோர்களுக்கிருக்கிறது. இதன்பின்னர் அவர்களுடைய வாழ்க்கையில் என்ன நடக்கிறது? என்பது அவர்களுடைய வினைப் பயன். அதற்கும், பெற்றோருக்கும் சம்பந்தமில்லை.

ஆகவே, பிள்ளைகளின் உயர்வுக்குத் தேவையான வழிகாட்டல்களைச் சிறுவயதிலிருந்தே வழங்க வேண்டியது பெற்றோர்கள், மூத்தோர்கள், ஆசிரியர்களின் கடமை எனவும் அவர் மேலும் வலியுறுத்தினார் (5-18)

# ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதியால் தீவகத்தில் 650 மரங்கள் நடுகை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி அந்தோனிப்பிள்ளை ஜூட்சன், தனது நீதி நிர்வாக வலயத்தில் 650 இற்கும் மேற்பட்ட பயன்தரு மரங்களை நடுகை செய்யும் திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இராணுவம் மற்றும் கடற்படையின் ஆளணி உதவியுடன் இந்த மர நடுகை கடந்த வாரம் அல்லைப்பிட்டியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (5-8)



# மண்டைதீவு கை.பேரின்பநாயகத்தின் கவிதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு "மகிழ்நன்" கை.பேரின்பநாயகத்தின் "சொல்லாது போன காதல்" கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் மண்டைதீவு வேப்பந்திடல் முத்துமாரி அம்மன் ஆலய திவாகர் மண்டபத்தில் நடைபெற உள்ளது. தாவடி இந்து தமிழ் வித்தியாலய அதிபர் ப.சுதானந்தராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் கலாநிதி செ.சேதுராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வேலணை பிரதேசசபை உறுப்பினர் அ.ஶ்ரீபத்மராசா, வடமாகாண சுகாதார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், கல்வியியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மா.பிரபாகரன், எழுத்தாளர் திருமதி பி.கலைச்செல்வி, ஓய்வு நிலை ஆசிரியர் மா.திருலிங்கம், ஆசிரியை திருமதி கபிலராணி வசீகரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வின் வரவேற்புரையை கிராம உத்தியோகத்தர் ம.சசிகாந்தும் நூலின் வெளியீட்டுரையை ஶ்ரீதிவ்யனும் நிகழ்த்த முதல் பிரதியை திருமதி புனிதவதி அம்பலவாணர் பெற்றுக் கொள்வார். நூல் ஆய்வுரையினை வலம்புரி நாளிதழின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆற்றுவதுடன் ஏற்புரையினை நூலாசிரியர் கை.பேரின்பநாயகம் நிகழ்த்துவார். (5)



**நிறைவான கிராமம் (சப்ரிகம) திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தொண்டைமானாறு கொத்திய காடு ஆழ்வாதனை வீதி மக்கள் பயன்பாட்டிற்காக நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.**

**(படம்:- கரணவாய் செய்தியாளர்)**





மகாகவி பாரதியாரின் 99 ஆவது நினைவு தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நல்லூரிலுள்ள பாரதியார் சிலைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு அவைத்தலைவர் சீ.வீ. கே.சிவஞானம், யாழ்.மாநகர சபை மேயர் இம்மானுவல் ஆனல்ட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வீதி விளக்கு பொருத்த 15 இலட்சம் ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் 2020 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து முதற்கட்டமாக 150 தெரு விளக்குகள் பொருத்தப்படவிருப்பதாகத் நகர சபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.

பட்ஜெட்டில் தெருவிளக்கு கொள்வனவிற்கென ஒதுக்கப்பட்ட 15 இலட்சம் ரூபாய் நிதியில் முதற்கட்டமாக ஒரு வட்டாரத்திற்கு 13 தெருவிளக்குகள் வீதம் 11வட்டாரங்களிலும் விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

கொள்வனவு செய்யும் தெருவிளக்குகளை உடனடியாக பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கிடப்பில் போடப்படுவதனால் தெருவிளக்குகளுக்கான உத்தரவாதக் காலம் முடிவடைந்து விடும் எனவும் சபை உறுப்பினர்கள் வலியுறுத்தி இருந்தனர். (5-4-30)

# வல்லிபுர ஆழ்வார் கொடி

(குப்பிழான்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 17 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலயப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 23 ஆம் திகதி குருக்கட்டு விநாயகர் தரிசன உற்சவமும் 24 ஆம் திகதி வெண்ணெய் உற்சவமும் 25 ஆம் திகதி துகில் திருவிழாவும் 26 ஆம் திகதி பாம்புத் திருவிழாவும் 27 ஆம் திகதி கம்சன் திருவிழாவும் 28 ஆம் திகதி வேட்டை உற்சவமும் 29 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 30 ஆம் திகதி காலை தேர்த் திருவிழர்வும் முதலாம் திகதி மாலை சமுத் திரத் தீர்த்தோற்சவமும் 2 ஆம் திகதி காலை கேணித் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (5-4-18)

# உக்காத கழிவுப்பொருட்களை விற்பனை செய்ய முடியும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை மற்றும் வேள்ட் விசன் நிறுவனம் ஆகியன இணைந்து பின்லா திட்டத்தின் கீழ் உக்காத மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்களை பொதுமக்கள் விற்பனை செய்யும் வகையிலான வள நிலையம் ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பழைய மீன் சந்தைக்கு பின்புறமாக அமைந்துள்ள குறித்த வள நிலையத்தை சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்துள்ளார்.

குறித்த நிகழ்வில் வேள்ட் விசன் நிறுவன அதிகாரிகள், திட்டத்தின் ஆலோசகர் நிமால் பிரேமதிலக, சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் சபேசன், நகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தளிர்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திறப்பு விழாவினைத் தொடர்ந்து அங்கத்தவர் பதிவும் இடம்பெற்றது. முதலாவது அங்கத்தவராக நகரசபை தவிசாளர் தன்னை இணைத்துக் கொண்டார்.

குறித்த வள நிலையத்தில் பொதுமக்கள் கடதாசிகள், சுத்தமான பொலித்தீன்கள், பிளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடிப் போத்தல்கள், இரும்புப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வேள்ட்விசன் நிறுவனம் சாவகச்சேரி நகரசபையுடன் கழிவு முகாமைத்துவ செயற்றிட்டம் தொடர்பில் மூன்று வருட கால ஒப்பந்தம் ஒன்றினை கைச்சாத்திட்டு அதனூடாக இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான செயற்றிட்டங்கள் ஊடாக நகரில் பிளாஸ்டிக், பொலித்தீன் தேக்கத்தைக் குறைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (5-4-30)

# இலவச இசை வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் நுண்கலை வகுப்புக்க்ள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வகுப்புக்களின் புதிய பிரிவு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

நுண்கலை வகுப்புக்கள் வரிசையில் கர்நாடக சங்கீதம், வயலின், மிருதங்கம் மற்றும் நடனம் ஆகிய வகுப்புக்கள் நடைபெறும்.

இவ்வகுப்புகள் தொடர்பான நேர அட்டவணை மற்றும் மேலதிக தகவல்களை நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள நல்லூர் இளங்கலைஞர் மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஆர்வமுள்ள இருபாலாரும் வயது வேறுபாடின்றி பயில முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வகுப்புக்கள் வட இலங்கை சங்கீத சபையின் பாடத் திட்டத்திற்கமைவாக கற்பிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (5-4)




மகாகவி பாரதியாரின் 99 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று வவுனியா குருமன்காடு பகுதியில் உள்ள பாரதியாரின் உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியா நகரசபையின் உபதலைவர் சு.குமா ரசாமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான நா.சேனாதிராசா, க.சந்திரகுலசிங்கம், ரி.கே.ராஜலிங்கம், க.சுமந்திரன், பி.ஜானுஜன், சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் பா.லம்போதரன், வவுனியா மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படம்:- நெளுக்குளம் செய்தியாளர்)

# சேவை மாண்பு காணலும் அகவை அறுபதை ஓம்பலும்



திரு.ஐயாத்துரை இராஜரட்ணம் (SLPS - 1)
(B.Ed.,Trd in Primary)



திரு.ஐயாத்துரை குகானந்தராசா (SLPS - 1)
(B.A (Hons) PGDE)



திரு.ம.கிறிஸ்ரி லெனாட் மனுவல் (SLPS - 1)
(B.Com, PGDE (Merit), M.Ed)

### சேவை விபரம்

ஆசிரியர்:
கிளி/வன்னேரிக்குளம் ம.வி.-06.08.1988-31.07.1989
கிளி/ஆனைவிழுந்தான்குளம் அ.த.க.பா.-01.08.1989-04.01.1990
பயிற்சி ஆசிரியர்:
யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை-05.01.1990-31.12.1991
ஆசிரியர்:
கிளி/ஆனைவிழுந்தான்குளம் அ.த.க.பா.-01.01.1992-30.01.1993
அதிபர்:
கிளி/ஆனைவிழுந்தான்குளம் அ.த.க.பா.-31.01.1993-19.06.1994
கிளி/யூனியன்குளம் அ.த.க.பா.-20.06.1994-31.05.1994
முல்/பாணன்காமம் மூன்றுமுறிப்பு அ.த.க.பா.-01.06.1998-03.08.2000
SLPS III:
முல்/பாணன்காமம் மூன்றுமுறிப்பு அ.த.க.பா.-04.08.2000-24.02.2004
கிளி/ ஐயனார் புரம் அ.த.க.பா-25.02.2004 -03.03.2010
கிளி/சிவநகர் அ.த.க.பா.-04.03.2010-19.12.2019

### சேவை விபரம்

கிளி/வன்னேரிக்குளம் ம.வி.-இ.ஆ.சேவை
-20.01.1989-01.05.1994
கிளி/வன்னேரிக்குளம் ம.வி.-கடமை நிறைவேற்றும் அதிபர்
-02.05.1994-08.12.2001
கிளி/வன்னேரிக்குளம் ம.வி.-இ.அ.சே.2-II
-09.12.2001-19.01.2003
கிளி/அக்கராயன் ம.வி.-இ.அ.சே.2-I
-20.01.2003-09.01.2007
கிளி/பூநகரி நல்லூர் ம.வி.-இ.அ.சே.-I
-10.01.2007-14.12.2010
கிளி/கனகபுரம் ம.வி.-இ.அ.சே.-I
-15.12.2010-21.06.2015
பளை கோட்டக்கல்விப்பணிப்பாளர் இ.அ.சே.-I
-22.06.2015-30.01.2020
31.01.2020 ஓய்வு

### சேவை விபரம்

ஆசிரியர்:
கிளி/பூநகரி ம.வி.-03.08.1994-11.09.1994
கிளி/முருகானந்த ம.வி.-12.09.1994-19.07.1998
கிளி/இராமநாதபுரம் ம.வி.-20.07.1998-28.02.2006
அதிபர்:
கிளி/தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் வித்.
-01.03.2006-09.01.2007
கிளி/முருகானந்த ம.வி.
-10.01.2007-09.11.2008
கிளி/வட்டக்கச்சி ம.வி.
-10.11.2008-02.05.2017
கிளி/இராமநாதபுரம் ம.வி.
-03.05.2017-24.05.2020

## பணி நயந்து போற்றுகிறோம். ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகிறோம்.

**வாழ்த்துவோர்: அதிபர்கள் சங்கம், கிளிநொச்சி மாவட்டம்.**

(C-283)

# மணிவிழா வாழ்த்து

## திரு.சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார் (S.L.P.S - 1)

(அதிபர், யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

### சேவை விபரம்

ஆசிரியப் பணி:
மு/செம்மலை ம.வி.
- 1985.12.26 - 1994.04.26
மு/குமுழமுனை ம.வி.
- 1994.04.27 - 2000.08.03

அதிபர் சேவை:
மு/குமுழமுனை ம.வி.
- 2000.08.04 - 2005.05.12
யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
- 2005.05.13 - 2006.07.30
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
- 2006.07.31 - 2007.03.13
யா/ கம்பர்மலை வித்தியாலயம்
-2007.03.14-2012.08.15
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
- 2012.08.16 - 2020.04.16

அகவை அறுபதை அணிகொள்ளும்
குமுழமுனை மண்ணின் தலைமகனே!
கல்லூரியின் மகிமைக்காய் நிதமும்
அர்ப்பணிப்பான சேவையினை வழங்கி
பல்துறை ஆளுமையின் சிகரமாய் நின்று
சேவை மாண்புடை நாயகனே!
என்றென்றும் நலமோடும் வளமோடும்
வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றோம்.



(C-290)

**பணிபாளர் நலன்புரிக் கழகம்,**
**யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வல்வெட்டித்துறை.**

# மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பரை கைப்பற்றிய பிரதேச செயலர் அணியினர்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள முரசுமோட்டை ஐயன் கோயிலடிப்பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனம் ஒன்றை கண்டாவளை பிரதேச செயலர் தலைமையிலான குழுவினர் கைப்பற்றி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தின் முரசுமோட்டை ஐயன் கோவிலடிப்பகுதியில் நேற்று முன்தினம் மணல் ஏற்றிக் கொண்டிருந்த டிப்பர் வாகனத்தை கண்டாவளை பிரதேச செயலாளர் ரீ.பிருந்தாகரன், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரே இந்நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் வாகனத்தை கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதன் பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு டிப்பர் வாகனத்தை கொண்டு சென்ற பொலிஸார் டிப்பர் வாகனத்தை மணல் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் இருப்பதாக குறிப்பிட்டிருந்ததாகவும் அதற்கு பதிலளித்த பிரதேச செயலாளர் தன்னிடம் எந்தவித அனுமதிப்பத்திரங்களையும் காண்பிக்கவில்லை



எனவும் முரசுமோட்டை ஐயன் கோயில் பகுதியில் மண்ணேற்றுவதற்கான எந்த அனுமதிப் பத்திரங்களும் இதுவரை வழங்கப்படவில்லை எனவும் பிரதேச செயலாளர் சுட்டிக்காட்டியிருந்தார். (5-4-315)

## கலந்துரையாடல்

சமகாலக்கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தின் 74 ஆவது நிகழ்வாக காண்பியக் கலைஞரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையினைச் சார்ந்த கலை வரலாற்றாசிரியருமான கலாநிதி. தா.சனாதனன் "யாழ்ப்பாணத்தில் சமூக மாற்றமும்சனரஞ்சக வெளிப்பாடும் திருமண மண்டபங்களும்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை சமகாலக் கலை, கட்டடக்கலை, மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகம், இல. 199, கோவில் வீதி, நல்லூரில் இடம் பெறவுள்ளது. (5-4)

# அனைவரும் ஒத்துழைத்தால் மட்டும் மீள் சுழற்சி தொழிற்சாலை உருவாக்கப்படும்

(சாவகச்சேரி)

அடுத்த வருட நடுப்பகுதியில் சாவகச்சேரியில் மீள் சுழற்சி தொழிற்சாலை ஒன்று உருவாகும் வாய்ப்பு இருப்பதாக கழிவு முகாமைத்துவத்தினை அபிவிருத்தி செய்வதற்கான பின்லா செயற்றிட்டத்தின் ஆலோசகர் நிமால் பிரேமதிலக தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்ற கழிவு வளநிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகர சபையினர் கழிவு முகாமைத்துவத்தினை அபிவிருத்தி செய்வதற்கான பின்லா திட்டத்தை சரியான முறையில் கையாண்டால் அடுத்த வருட நடுப்பகுதியில் சாவகச்சேரியில் மீள் சுழற்சி தொழிற்சாலை ஒன்றினை ஆரம்பிக்க நாம் தயாராக உள்ளோம்.

கழிவுகளை அகற்றுவது உள்ளூராட்சி மன்றங்களுக்கு பாரிய சவாலாகக் காணப்படுகிறது. நாங்கள் எவ்வளவு முயற்சி எடுத்தாலும் கழிவு முகாமைத்துவத்தில் வெற்றி காண முடிவதில்லை. கழிவு முகாமைத்துவத்தினை நகர சபை தனியாக செய்ய முடியாது. இதற்கு பொதுமக்களின் பங்களிப்பும் அவசியம். குப்பைகளை உருவாக்குவது மக்கள் தான்.

எனவே கழிவு முகாமைத்துவத்தினை மேற்கொள்ளும் கடமை அவர்களுக்கும் உண்டு. கழிவு முகாமைத்துவம் பேணப்படாமையால் கால்நடைகள் பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருட்களை உட்கொண்டு இறந்து போகின்றன. நாம் இன்று சாவகச்சேரியில் கழிவு முகாமைத்துவத்தை முன்னெடுப்பதற்கான ஆரம்ப புள்ளிஒன்றினை வைத்துள்ளோம். என்னதான் செய்தாலும் ஊக்கமும் உணர்வும் இல்லாமல் எதிலும் வெற்றிகொள்ள முடியாது. கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப் புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

குப்பைகளை தரம் பிரித்து கொடுக்காதவர்களுக்கு எதிராக வழக்கினை பதிவு செய்யும் அதிகாரத்தை அரசாங்கம் உள்ளூராட்சி சபை மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோருக்கு வழங்கவுள்ளது.

குப்பைகளை தரம் பிரித்து வழங்க பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற் படுத்த வேண்டும். அத்துடன் குப்பைகளை எரிப்பதனையும் கடலில் வீசுவதனையும் நிறுத்த வேண்டும். எரிப்பதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். அதேவேளையில் பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது.

குப்பைகளை கடலில் வீசுவதால் கடல்வாழ் உயிரினங்கள் இறந்து மீனவத் தொழில் பாதிக்கப்படும் அதே வேளையில் கட லுணவுகளை உட்கொள்பவர்களும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் கழிவு முகாமைத்துவம் சிறப்பான முறையில் இடம்பெற வேண்டுமானால் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என் அவர் மேலும் தெரிவித்திருந்தார். (5-4-30)



பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பான சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்ளும் விழிப்புணர்வு கருத்தமர்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி பூநகரி பிரதேசசபை மண்டபத்தில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் கிளி.மாவட்ட இணைப்பாளர் ஆர்.பானுஜா தலைமையில் இடம்பெற்ற கருத்தமர்வில் சட்டத்தரணி சண்முகநாதன் வைஷ்ணவி சட்ட ஆலோசகராகக் கலந்து கொண்டார். (படம்:முறிகண்டிச்செய்தியாளர்)

# ஒருங்கிணைப்பு செயலாளராக சங்கரலிங்கம் நியமனம்

(நெளுக்குளம்)

ஜனநாயக இடதுசாரிகள் முன்னணியின் தலைவரும், நீர்வழங்கல் வசதிகள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்காரவால் தனது அமைச்சின் வன்னி மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு செயலாளராக வி.சங்கரலிங்கத்திற்கு நேற்று முன்தினம் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள அமைச்சில் வைத்து இந்த நியமனக் கடிதத்தினை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வழங்கினார்.

வன்னி மாவட்டத்தில் நடைபெறும் அபிவிருத்திக்குழு கூட்டங்களில் அமைச்சின் சார்பாக கலந்து கொள்வதற்கும் அமைச்சரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவர் முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை சபையின் வடக்கிற்கான நிபுணராகவும் தற்போது ஜனநாயக இடதுசாரிகள் முன்னணியின் வன்னி மாவட்ட செயலாளராகவும் இருந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-299)



பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் திறன் வகுப்பறைத் திறப்பு விழா அதிபர் ஜோன் செல்வரட்ணம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் கலந்து கொண்டு திறன் வகுப்பறையினைத் திறந்து வைத்தார். (படங்கள்: அக்கராயன் செய்தியாளர்)



கிளிநொச்சியில் சமுதாயம்சார் சீர்திருத்தத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது. இதில் வட மாகாணத்தைச் சேர்ந்த நீதிமன்றங்களில் பணியாற்றுகின்ற சமுதாயம்சார் சீர்திருத்தத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களில் கடமையாற்றுகின்ற சீர்திருத்த உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (படம்: கண்டாவளை செய்தியாளர்)

# இராசிபலன்

12.09.2020
ஆவணி 27, சனிக்கிழமை
தசமி பின்னிரவு 12.14 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 1.30 மணிவரை
சுபநேரம் 3.03-4.33 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
சந்திராஷ்டமம் கேட்டை, மூலம்

வளவன்



மேஷம்

கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன நன்மையுண்டு.



ரிஷபம்

வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.



மிதுனம்

எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லதாக அமையலாம், நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.



கடகம்

பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், அலைச்சல்கள் சற்றுக் கூடும் நாள்.



சிம்மம்

சிறப்பான நாள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள்.



கன்னி

திறமைகள் வெளிப்படும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.



துலாம்

தடைகளைத் தகர்த்தெறிந்து தன்னிறைவு காணும் நாள், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.



விருச்சிகம்

எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் சில இடையூறுகள் ஏற்படலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.



தனுசு

அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வராத உறவினர்கள் உங்களின் வீடுகளுக்கு திடீரென வரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு.



மகரம்

கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.



கும்பம்

பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமை அடையும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், போசன சுகமுண்டு.



மீனம்

மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

உன்னோடு பேசும் ஒவ்வொருவரும் ஒரு ஞானி என்று நினை.

# மக்களின் மனம் கவர்ந்த அறிவுத்திருக்கோவில்



இலங்கை மணித்திருநாட்டின் சிகரமாய் அமைந்த யாழ்ப்பாணத்தில் உள்ள அறிவுத் திருக்கோவிலின் அமைப்பும் கம்பீரமும் வாழ்வின் நோக்கத்தையும் மானுடத்தின் பிறப்பு, இறப்பு ஆகியவற்றையும் அறிய வைக்கின்றது. இது அறிவுத் திருக்கோவிலின் முகவாயிலிருந்தே தொடங்குகிறது.

அறிவுத்திருக்கோவிலில் காலடி வைத்ததுமே ஒரு புண்ணிய பூமிக்குள் புகுந்துவிட்டதாக ஓர் உணர்வு பரமதிருப்தி ஆனந்தம். அறிவுத்திருக் கோவில் யாருக்காக அமைக்கப்பட்டது? என்ற வினாவிற்கு விடை கிடைத்தப்போ அதன் மகிமையும் மேன்மையும் மேலும் வலுவடைகின்றது. ஆம் ஒரு மனிதருக்காகக் கட்டப்பட்ட அழகிய திருக் கோவில்.

கருவறையோ கண்டா மணியோ நந்தியோ உண்டியலோ காணப்படாத ஒரு கருவூலம். அப்போ மனிதருக்கான கோவிலாயின் இங்கே இறை யார்? என்ற வினா எழுகிறதல்லவா! ஆம் அதற்கான விடைதான் "அவனில் தான் நீ உன்னில் அவன்" என்ற மகரிஷியின் தத்துவம் தெளிவாகின்றது.

யாரும் யாருக்கும் உயர்வோ தாழ்வோ கிடையாது. ஒவ்வொரு மனிதனும் இறையின் படைப்பு என்ற மகா தத்துவத்தை உள்ளுணர்வாக பெற்றுக்கொள்ள முடிகிறது.

இற்றைக்கு இருபத்து ஐந் தாண்டுகளுக்கு முன் வேதாத்திரி மகரிஷியை சாதாரண ஒரு மனிதனாக ஆழியாறிலே தன் துணைவியாருடன் சந்தித்த பெரும் பாக்கியம் பெற்றவரும் பிரம்மஞானப் பயிற்சி பெற்ற தம்பதியர் மகரிஷியிடம் சான்றிதழையும் அப்பிள் கனியைப் பெற்று ஆசீர்வதிக்கப்பட்ட அவரது பேராற்றல் கருணையினால் பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் ஐயாவின் எண்ணத்தில் எழுந்த உத்வேகமே பெருந்தொகைப் பணத்தை முதலிட்டு நிலத்தையும் கட்டடத்தையும் அமைத்த பெருமை அவரையே சாரும்.

அவரது தெளிந்த விரிந்த மனதில் எழுந்த எண்ணம் எதிர்பார்த்த தொகையை விடவும் மேலதிகமாகவும் பல படிகளைத் தாண்டியும் அமையப்பெற்ற இந்த அறிவுத் திருக் கோவிலின் தலைவராகவும் மனவளக்கலை மன்ற அறக் கட்டளையின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றமை போற்றுதற்குரியது.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக யுத்தத்தால் பாதிப்புற்ற மக்களின் உடல், உள உபாதைகளும் அவயவங்களை இழந்து அல்லல்படுபவர்களையும் கொடும் குண்டுகளின் சிதறல்களையும் இன்னமும் தம் உடலினுள் நிரந்தர உறுப்பாகக் கொண்டு வாழ்ந்து வரும் மக்களின் மனத்தை வளப் படுத்துவதற்காக தன் மனதில் தொண்டாற்றி இன்பம் காண்பேம் என்ற மகரிஷியின் தத்துவத்தை தலையேற்று அறிவுத்திருக்கோவிலை இலங்கையிலேயே முதலாவதாக அமைத்த பெருமையுமீ அவரையே சாரும்.

தியான மண்டபம் மகரிஷியின் ஆசீர்வதிக்கும் நிலையில் அமைந்த உருவப்படம் மேடையில் உயர வைக்கப்பட்டு அளவில்லாப் பேராற்றல் கருணையைப் பொழிந்த வண்ணம் இருப்பதே எமக்குப் பரவசம் தரும். மண்டபத்தில் நுழைந்ததும் அருட்பேராற்றல் (காந்த) அலைகள் எமது உடலினுள் புகுவதை உணர முடிகிறது. அமைதி நிலவும், கைதட்டல் உரக்கப் பலரும் உரையாடல் எதுவும் நிகழ்வதில்லை பயிற்சியை நடத்துபவர் மட்டும் ஒலிவாங்கியில் பேசிக்கொண்டிருப்பார்.

அறிவுத்திருக்கோவிலில் பரிபூரண தொண்டு, கடமை, சேவை, இளைப்பாறல், மௌனம், நிம்மதி போன்ற தேவைகளை மக்களுக்காகவே நிறைவேற்றி வருகின்றமை அதிசயம் அல்லவா.

அறிவுத்திருக்கோவில் சூழலும் நிலப்பரப்பின் இரு மருங்கிலும் அஸ்வினியின் முகங் கொண்ட அழகிய மரங்கள் காற்றில் அசைந்து அசைந்து வருபவர்களை வரவேற்பது போன்று முன் நிலப்பரப்பில் அழகு தருகின்றன.

தொடர்ந்து மஞ்சள் நிற பெரிய மலர்களின் அழகை நின்று பார்க்கும் வகையில் செடிகளின் செழிப்புக்கு காரணம் பயிற்சியின் போது நாம் வழங்கும் வாழ்த்துகள் தானோ என எண்ணத் தோன்றுகிறது.

எமது எதிர்காலச் சந்ததிகளின் நலன் கருதி அறிவுத்திருக்கோவிலுக்கு உங்கள் குழந்தைகளையும் பெண்பிள்ளைகளாயின் பதின்னான்கு வயதைப் பூர்த்தி செய்தவர்களாகவும் அழைத்து வந்து "யாம் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெற" வைப்போம்.

உடல், உயிர், மனம் இம் மூன்றுக்குமான பயிற்சி மகரிஷியால் தரப்பட்டுள்ளது மாத்திரமல்லாது அகத்தாய்வு போன்ற சுய அலசல்களையும் மூன்று படி நிலைகளில் பயிற்றுவிக்கப்படுவதால் காலதாமதமின்றி பயிற்சி வகுப்புகளில் பங்கேற்கும் வண்ணம் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் மனவளக்கலை மன்ற அறக் கட்டளை சார்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

தான் சமுதாயம் இயற்கை என்ற வாழ்வின் தத்துவக் கோட்பாட்டுக்கு இணங்க பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் ஐயாவின் தன்னலமில்லாத் தொண்டினை மேலும் வளம் பெறும் வகை இன்னமும் பெருந் தொகையான மக்கள் அறிவுத் திருக் கோயிலுக்கு வருகை தந்து பயனடைவதால் அவரது மனமும் குளிர்ந்து மக்களும் வளமோடு வாழ்வர் என்பதில் ஐயமில்லை.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

அருள்நிதி க.தவமணிதாசன்

# அமர்வு நேரத்தில் மாற்றம்

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வு நேரத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

"இதற்கமைவாக எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் பாராளுமன்ற அமர்வு முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.30 மணியுடன் நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

16

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



● பொது வர்த்தக நிலையங்கள், கைத்தொழில் நிர்மாணிப்புகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஆதனங்கள்.

● பிற சகல விதமான பொதுக் கட்டடங்களும் அவை அமைந்துள்ள நிலங்களும்.

● விளக்குகள்,விளக்குத் தூண்கள், இரும்பு உதவிச் சாதனங்கள் முதலியன.

மேலே சொல்லப்பட்ட ஆதனங்களை சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ள கருமங்களுக்காக நிர்வகிக்கவும் அவற்றில் இருந்து கிடைக்கின்ற வருமானத்தைச் சட்டத்தில் இடமளித்துள்ள பணிகளுக்காகப் பிரயோகிக்கவும் முடியும். அரசாங்க ஆதனங்கள் அரசாங்கத்திற்கே சொந்தமானவையாகும். ஒப்படைக்கும் போது நிலவிய நிபந்தனைகளை மீற முடியாது.

### உள்ளூராட்சி மன்றங்களினால் வருமானம் தேடும் வழிமுறைகள்

உள்ளூர் அதிகார சபைகள் பொது மக்களுக்கு செய்யும் கடமைகளுக்கும் வழங்கும் சேவைகளுக்கும் ஏற்க வேண்டிய செலவீனங்களுக்கு வருமானம் ஈட்டப்பட வேண்டும்.

அதற்கான வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்காக அந்தந்த உள்ளூர் அதிகார சபைகள் ஸ்தாபிக்கப்பட்ட சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மூலம் அவற்றிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக இடைக்கால விதிகளையும் உருவாக்கிக் கொள்வதற்கு குறிப்பிட்ட கட்டணத்தை பெறுவதற்கு சட்டபூர்வமான ஏற்பாடுகள் உண்டு.

முக்கிய சட்டங்கள் அதாவது உள்ளூர் அதிகார சபைகள் ஸ்தாபிக்கப்பட்ட சட்டங்கள் ஒழுங்குவிதிகள் மூலம் அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக வேறு சட்டங்களின் கீழும் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அந்தந்த உள்ளூர் அதிகார சபைகளுக்கு வருமானத்தை ஈட்டுவதற்கு உரித்தான சட்ட ஏற்பாடுகள் பின்வருமாறு.

வருடாந்த வரவு-செலவு அறிக்கையை தயாரிப்பதன் மூலம் எதிர்பார்க்கும் வருமானத்தையும் செலவீனங்களையும் பற்றி உரிய நிர்வாகக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதன் ஊடாக உள்ளூர் அதிகார சபைகளின் நிதி முகாமைத்துவத்தை வலுப்படுத்த முடியும்.

அதனூடாக சிறந்த மக்கள் சேவையை வழங்குவதன் மூலம் மக்களுக்கும் உள்ளூர் அதிகார சபைகளுக்கும் இடையில் சிறந்த உறவைப் பேணிப்பாதுகாக்க முடியும்.

**மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளினால் அவ்வதிகாரத்திற்குட்பட்ட பிரதேச மக்களுக்கு வழங்கப்படவேண்டிய சேவைகளுக்குத் தேவையான செலவுகளை ஈடு செய்வதற்கு வருமானங்களை ஈட்டிக் கொள்ளக்கூடிய வகையில் சட்டரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அச்சபைகளுக்குச் சேரவேண்டிய வருமானம் உரிய விதத்தில் அறவிடப்படாமல் இருப்பதாக கூறப்படுகிறது.**

எனினும் இலங்கையின் பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களால் அச்சபைகளுக்குச் சேரவேண்டிய வருமானம் உரிய விதத்தில் அறவிடப்படாமல் இருப்பதாகவும் இதன் காரணமாக அவ்வுள்ளூராட்சி மன்றங்களின் ஒட்டுமொத்த வருமான நிலுவைத் தொகையின் அளவு பாரியளவில் அதிகரித்துள்ளது என்பது இது தொடர்பில் ஆசிய மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் நடத்தப்பட்ட வருமானத்தை மதிப்பிடும் உடன்பாட்டுக் கணக்காய்வில் வெளிவந்துள்ளது. அவதானிக்கப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப, அடிப்படைச் சட்டம், மற்றும் ஏனைய சட்டங்களின் கீழ் உள்ளூராட்சி மன்றமொன்றுக்காக அறவிடக்கூடிய வருமான மூலங்கள் மற்றும் அவ்வருமானங்களை அறவிடும் சட்டரீதியான செயற்பாடு தொடர்பில் தெளிவான விளக்கமின்மை மற்றும் வருமானத் திரட்டல் தொடர்பான உரிய அதிகாரிகளிடமுள்ள கடமை மற்றும் பணிப்பொறுப்புகள் பற்றிய சரியான கவனமின்மை மற்றும் கணிசமானளவில் வளர்ந்துள்ள நிலுவை வருமானத்தை அறவிட்டுக்கொள்வதில் முறையான திட்டமொன்று இல்லை என்பதுமே இதற்குக் காரணமாகவுள்ளது என்பது மேலும் தெரியவந்துள்ளது. (நன்றி: "உள்ளூராட்சி மன்றங்கள் வருமானம மூலகங்கள்" ஆசிய மன்றம்)

உள்ளூராட்சி மன்றமொன்றிற்கு பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானம் மற்றும் ஈட்டல்களை இரண்டு பிரதான பகுதிகளுள் அடக்க முடியும். அவை 1.மீண்டு வரும் வருமானம் 2.மூலதன வருமானம். இதற்கிணங்க இவ்விரண்டு பகுதிகளுள்ளும் அடங்கக்கூடிய வருமானங்களை படம்-1 காட்டுகிறது.

### வருமான வகைப்படுத்தலும் அதனுடன் தொடர்பான சட்ட ஏற்பாடுகளும்

உள்ளூராட்சி மன்றங்களால் உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய வருமானங்களை தற்போதுள்ள வருமான வகைப்படுத்தலுக்கிணங்க பின்வருமாறு வகைப்படுத்த முடியும் என்பதுடன் அவ் ஒவ்வொரு வருமான அறவீடு மற்றும் வகைப்படுத்தலுக்குரிய சட்ட ஒழுங்குகள் பின்வருமாறு அமையும்.

● வீதவரிகள் மற்றும் வரிகள் (**Rate & Taxes**) (10 வழிகள் தரப்பட்டுள்ளது )

● வாடகை (**Rent**) (5 வழிகள் தரப்பட்டுள்ளது )

● வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் (**Trade Licence**) (8 வழிகள் தரப்பட்டுள்ளது )

● சேவைகளுக்கான கட்டணங்கள் (7 வழிகள் தரப்பட்டுள்ளது )

● உத்தரவு ஆணை /பற்றாணைக் (**warrant**) கட்டணங்கள் மற்றும் குற்றப் பணங்கள் (5 வழிகள் தரப்பட்டுள்ளது )


● ஏனைய வருமானங்கள் (5 வழிகள் தரப்பட்டுள்ளது )

● அரச நன்கொடைகளும் மீளளிப்புக்களும் (3 வழிகள் தரப்பட்டுள்ளது )

மேற்காட்டப்பட்ட வகைப்படுதலுக்கு பல்வேறு சட்டங்களின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தமது சேவைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வருமானங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 43 பிரதான வருமான வழிகள் காட்டப்பட்டுள்ளன. இவைபற்றி விபரமாக கீழே தரப்படுகிறது

● வீதவரிகள் மற்றும் வரிகள் **(Rate & Taxes)**

உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம்




*படம்-1* (நன்றி: ஆசிய மன்றம்)

மாநகர சபை மற்றும் நகர சபை பிரதான வருமானம்
விடய இலக்கம் - 310
பிரதேச சபை பிரதான வருமானம்
விடய இலக்கம் - 10

இவ்வருமானத் தலைப்பின் கீழ் கொண்டுவரப்படும் ஆதன மதிப்பீட்டு வரி மற்றும் வரி வகைகள் கீழ்க் காட்டப்பட்டுள்ளன.

01. ஆதன மதிப்பீட்டு வரி (**Assess ment Tax**)

ஒரு சபையின் (மாகாண, நகர மற்றும் பிரதேச சபை) அதிகாரத்திற்குட்பட்ட எல்லையினுள் அமைந்துள்ள வீடுகள், கட்டடங்கள், காணிகள் வாடகைக்கு விடப்பட்ட பாரிய கட்டடங்கள் குத்தகைக்கு அரசாங்கச் சொத்துக்கள் உட்பட எல்லா அசையாச் சொத்துக்களும் இந்த மதிப்பீட்டு வரிக்கு உட்பட்டதாகும். ஒரு சபைக்கு வருமானத்தைப் பெற்றுத் தரும் முக்கிய வளமாக இந்த வரி அமைந்துள்ளது. அமைச்சரால் நிர்ணயிக்கப்படும் விகிதத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி ஆட்சிக்குப் பொறுப்பான அமைச்சர் (தற்போது மாகாண சபைகள் அமைச்சர்) சொத்தினுடைய வருடாந்தப் பெறுமதியில் அறவிடப்படுகின்றது. எல்லாச் சொத்துக்களும் அவைகள் காணிகளாயினும் சரி கட்டடங்களாயினும் சரி சபையின் குறித்த மதிப்பீட்டுப் பதிவில் பதியப்பட வேண்டும்.

### சட்ட அதிகாரம்

● மாநகர் சபைச் சட்டத்தில் உள்ள (252ஆம் அத்தியாயம்) பிரிவு 230-244, 247, 251, 252, 254, 256, 262, 266A மாநகரசபைகளுக்கு மதிப்பீட்டு வரியை அறவிடுவதற்கான சட்ட அதிகாரத்தை வழங்குகின்றது.

● மாநகர சபைச் சட்டத்தில் உள்ள 160, 161, 166, 167, 168, 169, 170 எனும் பிரிவுகள் மற்றும் 172 ஆம் பிரிவுகள் ஏற்புடையன. (நடைமுறைப்படுத்த துணைச்சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்)

● பிரதேச சபைச் சட்டத்தின் உடைய (134-146, 156-166) ஆம் பகுதிகள் வரையுள்ள பகுதிகள் வழங்கியுள்ள மதிப்பீடு அறவீடு மதிப்பீட்டு வரியின் உடைய மீள் அறவீடு என்பனவற்றிற்கான துணைச்சட்டங்கள் மற்றும் பி..ச. ஏற்பாடுகள் (நிதி மற்றும் நிர்வாக விதிகள்) 32-43 வரையான பிரிவுகளும் ஏற்புடையன. (நடைமுறைப்படுத்த துணைச்சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்)

### தகைமை

1) வரியிருப்பாளருடைய சொத்து குறித்த சபை (மாகாண, நகர, பிரதேச சபை) பிரதேசத்தினுள் அமைந்திருப்பது.

2) பின்வரும் ஏதாவது பிரமாணங்களின் கீழ் காணியில் அல்லது கட்டடத்தில் வசிப்பவராக இருத்தல்.

(தொடரும்)

# ராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 01.09.2020 - 20.03.2022

## நான்கில் வருகிறது ராகு... வாழ்வில் வசந்தம் வரும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்பூரி சிங்காரம்**



**கும்ப இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், இப்பொழுது உங்கள் இராசிக்கு 4ஆம் இடமான சுக ஸ்தானத்திற்கு வந்துள்ளார். அதேபோல கேது பகவான் உங்கள் இராசிக்கு 11ஆம் இடத்திலிருந்து தொழில் ஸ்தானமான 10ஆம் இடத்திற்கு அதே நாளில் வந்துள்ளார்.

இதற்கிடையில் நவம்பர் 15ஆம் திகதி, உங்கள் இராசிக்கு 12ஆம் இடமான மகர இராசிக்கு குரு பகவான் செல்கின்றார். அங்கு அவர் நீச்சம்பெறுகின்றார். டிசெம்பர் 26ஆம் திகதி சனி பகவான் பெயர்ச்சியாகி மகரத்திற்குச் செல்கின்றார். இப்பொழுது ஏழரைச்சனி உங்களுக்குத் தொடங்குகின்றது. முதல் சுற்று நடப்பவர்களாக இருந்தாலும், மூன்றாவது சுற்று நடப்பவர்களாக இருந்தாலும் மிகமிக கவனத்துடன் செயற்பட வேண்டும். 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி, குரு பகவான் உங்கள் இராசிக்கு வருகிறார். அங்கிருந்து கொண்டு 5, 7, 9 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார்.

### சுக ஸ்தானத்தில் ராகு! தொழில் ஸ்தானத்தில் கேது!

ராகு இப்பொழுது சஞ்சரிக்கப்போவது 4ஆம் இடமாகும். இதை



'அர்த்தாஷ்டம ராகு' என்று சொல்வது வழக்கம். சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் ஆரோக்கியத் தொல்லைகள் அடிக்கடி தலைதூக்கும். மருத்துவச் செலவுகள் கூடும். சிறு தொல்லைகள் உடலில் தோன்றினாலும் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். தொழில் வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய வேலை அமையும்.

தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். கூட்டாளிகள் உங்களுக்கு இணக்கமாக நடந்துகொள்வார்களா என்பது சந்தேகம் தான். கொடுக்கல்-வாங்கல் சம்பந்தமான கணக்கு வழக்குகளை கச்சிதமாக வைத்துக்கொள்வது நல்லது. பணியாளர் தொல்லை அதிகரிக்கும். பிறரிடம் பொறுப்புகளை ஒப்படைக்கும் பொழுது உங்களுடைய மேற்பார்வையில் வைத்துக்கொள்ளவும். தொழிலை விரிவுசெய்ய கடன் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### செவ்வாய் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 04.01.2021 வரை)

மிருகசீரிட நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும்பொழுது, சகோதரர்களால் சில நன்மைகள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாக முடியும். வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறும். முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து முன்னேற்றப் பாதையில் செல்ல முடிவெடுப்பீர்கள். வங்கிகளில் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். 'நேர்முகத்தேர்வில் வெற்றிபெற்றும், இன்னும் வேலைக்கு வரச்சொல்லி அழைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது நல்ல பதில் கிடைக்கும். மற்றவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவீர்கள். சொத்து விற்பனையின் மூலம் வரும் தனலாபத்தை ஒரு சிலர் தொழிலுக்கு உபயோகப்படுத்திக் கொள்வர்.

### சந்திரன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (05.01.2021 முதல் 12.09.2021 வரை)

சந்திரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு மாற்றங்கள் உருவாகும். மனக் குழப்பங்கள் அதிகரிக்கும். எந்த ஒரு வேலையையும் 'செய்யலாமா வேண்டாமா?' என்ற இரட்டித்த சிந்தனை மேலோங்கும். வியாபார நுணுக்கங்களை வெளியில் சொல்லாதிருப்பது நல்லது. பொதுவாக எதிர்மறைச் சிந்தனைகளைத் தவிர்க்க வேண்டிய நேரமிது. உத்தியோகத்தில் எதிர்பாராத மாற்றங்கள் வரலாம். நீண்ட நாட்களாக நட்பாக இருந்தவர்கள் வாக்குவாதங்கள் செய்ததன் விளைவாகப் பகையாகலாம். விலை உயர்ந்த பொருட்கள் அல்லது நிலபுலன்களை ஒருசிலர் விற்க நேரிடும். பொருளாதாரத்தைப் பொறுத்தவரை இக்காலத்தில் யாருடைய பணமாவது உங்கள் கைகளில் புரளும்.

### சூரியன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (13.09.2021 முதல் 20.03.2022 வரை)

கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கொடுக்கல்-வாங்கல்களால் ஆதாயம் உண்டு. வெளிநாடு செல்லும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். அதிகாரிகளின் ஆதரவால் அலுவலகப் பணிகள் துரிதமாக நடக்கும். குடும்பத்தில் உள்ளவர்கள் குறைகள் தீர வழிவகுப்பீர்கள். அக்கம்பக்கத்து வீட்டாருடன் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். உத்தியோகத்தில் உங்கள் திறமை பளிச்சிடும். உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். வீடுகட்ட அல்லது வாகனங்கள் வாங்க எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் தேடிவரும்.

### பாதசார அடிப்படையில் கேது தரும் பலன்கள்

தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது பகவான் 'நிழல்கிரகம்' என்று வர்ணிக்கப்பட்டாலும், நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்னிற்பவர் ஆவார். பாதசார அடிப்படையில் பலன்களை அறிந்து கொண்டு செயற்படுவது நல்லது. பகை கிரகத்தின் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது அதற்குரிய பரிகாரங்களையும், வழிபாடுகளையும் செய்து கொண்டால் நற்பலன் கிடைக்கும்.

### புதன் சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (01.09.2020 முதல் 09.05.2021 வரை)

கேட்டை நட்சத்திரக்காலில் புதன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது வரவும், செலவும் சமமாக இருக்கும். உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியானவர் புதன். எனவே பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி சில முக்கிய முடிவெடுப்பீர்கள். அவர்களின் மேற்படிப்பு சம்பந்தமாகவோ, பணியில் சேர்வது சம்பந்தமாகவோ நீங்கள் செய்யும் முயற்சி பலன் தரும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். உத்தியோகத்தில் தற்காலிகப் பணியில் இருப்பவர்களுக்கு நிரந்தரப் பணி அமையும். குடும்பத்தில் ஏற்பட்ட வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. ஒருவேலையை முடிக்க




ஒன்று இரண்டு முறை அலைய வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

### சனி சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (10.05.2021 முதல் 16.01.2022 வரை)

உங்கள் இராசிக்கு இராசிநாதனாகவும், விரயாதிபதியாகவும் விளங்குபவர் சனி பகவான். எனவே இக்காலத்தில் குடும்பத்தில் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். கடன் சுமை குறையும். முயற்சிக்குரிய பலன் முழுமையாகக் கிடைக்கும். அரை குறையாக நின்ற பணிகள் விரைவில் முடிவடையும். இழப்புகளைத் தவிர்க்க எச்சரிக்கையோடு செயற்படுவீர்கள். ஒதுங்கி நின்ற ஒப்பந்தங்கள் தானாக வந்து சேரும். உயர் அதிகாரிகளுடன் ஏற்பட்ட உட்பூசல் மாறும். உங்கள் கருத்துக்களுக்கு ஒத்துவராதவர்களை விட்டு



விலகுவீர்கள். வீடுமாற்றங்கள், இடமாற்றங்கள் விருப்பம் போல் அமையும். அதிரடியாக முடிவெடுத்து அருகில் உள்ளவர்களை ஆச்சரியப்படுத்துவீர்கள்.

### குரு சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (17.01.2022 முதல் 20.03.2022 வரை)

குரு, உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். தன லாபாதிபதியான குருவின் சாரத்தில், தொழில் ஸ்தானத்தில் வீற்றிருக்கும் கேது உலா வரும்பொழுது தொழில் வளம் மிகச்சிறப்பாக இருக்கும். புதிய திட்டங்களைத் தீட்டி அதில் வெற்றி காண்பீர்கள். வி.ஐ.பி.க்கள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும், எதிர்பார்த்த பதவியும் கிடைக்கும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

நான்காமிடத்து ராகுவால் நன்மைகள் கிடைக்கவும், 10ஆம் இடத்து கேதுவால் தொழில் முன்னேற்றம் காணவும், சனிக்கிழமை தோறும் விரதமிருந்து அனுமன் கவசம் பாடி வழிபடுங்கள். நிலைமை சீரான பிறகு, வாலில் மணிகட்டிய ஜெய ஆஞ்சநேயர் அருள் வழங்கும் ஆலயத்திற்குச் சென்று வழிபடுவதும் நன்மை தரும்.

### பெண்களுக்கான பலன்கள்

ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். அர்த்தாஷ்டம ராகுவால் விரயங்கள் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. ஏழரைச்சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் தடைகளும், தாமதங்களும் வரலாம். உறவினர்களையும், உடன்பிறப்புகளையும் அனுசரித்துக் கொள்வது நல்லது. மூட்டுவலி, முழங்கால் வலி போன்றவை வந்து போகும். இல்லத்து பூஜையறையில் வராகி அம்மன் பாமாலை பாடி வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# பாரதம்

## தமிழகத்தில் அறிமுகமாகும் மூலிகை எரிபொருள்-மூலிகை விஞ்ஞானி அறிவிப்பு




(டில்லி)
இந்திய தமிழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி ராமர் பிள்ளை கண்டுபிடித்த மூலிகை எரி பொருள் விரைவில் தனியார் நிறுவனம் மூலம் சந்தைப் படுத்தப்படவிருக்கிறது.

சாக்கடை கழிவு நீரை, சுத்திகரிப்பு செய்து கண்ணாடி குடுவையில் வைத்து, அதனுடன் இவரது கண்டுபிடிப்பான இரு கலவைகளை கலந்து எரி பொருளாக மாறுவதை செய்து காட்டினார்.

தான் கண்டுபிடித்த இந்த எரிபொருளுக்கு தன்னுடைய தாயின் நினைவாக "தமிழ் தேவி மூலிகை எரிபொருள்" என பெயரிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மூலிகை எரிபொருளை இருசக்கர வாகனத்தில் ஊற்றி இயக்கியும் காட்டியமை குறிப்பிடத்தக்கது. (2)

## சீனாவின் அத்துமீறலுக்கு எதிராக ஆசிய நாடுகள் ஒன்றிணைய வேண்டும்


### அழைப்பு விடுக்கும் அமெரிக்கா

(பீஜிங்)
சீனாவின் அத்துமீறிய நடவடிக்கைகளுக்கு எதிரான ஆசிய நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நேரம் இதுவென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தென்சீனக் கடல் பகுதியில் தீவுகளை உருவாக்க உதவி வரும் சீன நிறுவனங்களுடனான உறவுகளை முறித்துக் கொள்ளுமாறு தென்கிழக்காசிய நாடுகளுக்கு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் போம்பியோ கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்ச்சைக்குரிய நீரிணைப் பகுதியில் செயற்கைத் தீவுகளை அமைத்துவந்த 24 சீன நிறுவனங்களுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது. இவ்வாறான நிலையிலேயே போம்பியோ கோரிக்கை விடுத்துள்ளார். (2)


## மூக்கு வழியாக 'ஸ்பிரே' சீனாவின் மருந்து தயார்



(பீஜிங்)
சீனாவில் கொரோனா வைரஸ் தொற்று நோயைத் தடுப்பதற்காக முதன் முதலாக மூக்கு வழியாக 'ஸ்பிரே' செய்யக்கூடிய தடுப்பு மருந்து உருவாக்கப்பட்டுள்ளது.

சீனாவில் கொரோனா வைரஸ் தொற்று நோயை தடுப்பதற்காக முதன் முதலாக மூக்கு வழியாக 'ஸ்பிரே' செய்யக்கூடிய தடுப்பு மருந்து உருவாக்கப்பட்டுள்ளது. ஹொங் கொங் பல்கலைக்கழகம், ஜியாமென் பல்கலைக்கழகம், பீஜிங் வாண்டாய் உயிரியல் மருந்தகம் ஆகியவற்றின் கூட்டு தயாரிப்பு இது. இந்த தடுப்பு மருந்தை மனிதர்களுக்கு செலுத்தி பார்க்கும் முதல் கட்ட மருத்துவ பரிசோதனைக்கு சீன தேசிய மருத்துவ தயாரிப்புகள் கழகம் தனது ஒப்புதலை அளித்துள்ளது.

இந்த மருத்துவ பரிசோதனை நவம்பர்மாதம்தொடங்கும் என தகவல்கள் வெளியாகி உள்ளன. இதில் 100 பேருக்கு மூக்கு வழியாக 'ஸ்பிரே' செய்து அதன் விளைவுகளை ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)



## உலகின் தூங்கா நகரம் என வர்... நியூயோர்க் நகரின் இரட்டை கோபு... 19 ஆண்டுகள் நிறைவடைந்த நா...

## ஆப்கானில் தலிபான்கள் தாக்குதல் 16 படைவீரர்கள் உயிரிழப்பு

(காபூல்)
அமைதி பேச்சுவார்த்தை நடக்கவிருக்கும் நிலையில் ஆப்கானிஸ்தானில் நன்கர்ஹர் மாகாணத்தில் தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 16 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

இன்று கட்டாரில் ஆப்கான் அரசு மற்றும் தலிபான்களுக்கும் இடையே அமைதி பேச்சுவார்த்தை நடக்கவிருக்கும் நிலையில், தலிபான்கள் இந்த் தாக்குதலை நடத்தி உள்ளனர். ஆப்கானிஸ்தானில் தலிபான்களுடனான போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் தலிபான்களை அவ்வப் போது ஆப்கான் அரசு விடுவித்து வருகிறது.

மேலும், ஆப்கானிஸ்தான் அரசு மற்றும் தலிபான்கள் இடையே கட்டாரில்நடை பெறும் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி அஷ்ரப் கானி சம்மதம் தெரிவித்திருந்தார்.

பக்ரீத் திருநாளை முன்னிட்டு மூன்று நாட்கள் அங்கு போர் நிறுத்தத்திற்கு தலிபான்கள் ஒப்புக் கொண்டனர்.

முன்னதாக, ஆப்கானிஸ்தானில்தலிபான்களுடனானபோரை முடிவுக்குக் கொண்டு வர தலிபான்களின் நிபந்தனைகளை ஏற்று 900 தலிபான்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதற்கிடையிலும் ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கும், அரசுப் படைகளுக்கும் இடையே மோதல் வலுத்து வருகிறது. இந்த நிலையில் ஐஎஸ் தீவிர வாதிகளும் தாக்குதலை அவ்வப் போது நடத்தி வருகின்றனர்.(2)

## ரகசியத் தகவலை வெளியிட்ட... 5 பத்திரிகையாளர்களுக்கு சிறைத்...

### துருக்கியில் பரபரப்பு

(அங்காரா)
இரகசிய தகவலை வெளியிட்டதாக ஒரே நேரத்தில் 5 பத்திரிகையாளர்களுக்குச் சிறைத்தண்டனை விதித்திருப்பது துருக்கியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

துருக்கியில் பேரிஸ் டெர்கோக்லு, ஹூல்யா கிலிங்க், எரன் எகின்சி, பேரிஸ் பெஹ்லிவன், பெர்ஹட் செலிக், அய்தின் கெசர், எரிக் அகாரர், முரார் அகிரல் ஆகிய 8 பத்திரிகையாளர்கள் வெவ்வேறு ஊடக நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர்.

இவர்கள் லிபியாவில் கொல்லப்பட்ட தேசிய நுண்ணறிவு அமைப்பின் ஊழியர்களுடைய புனைபெயர்களை தங்கள் ஊடகங்களில் வெளியிட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக இஸ் தான்புல் நீதிமன்றில் அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது.

அவர்கள் அரசின் ரகசியத்தை வெளியிட்டு விட்டதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

விசாரணைக்கு பின்னர் பேரிஸ்டெர் கோக்லு, எரன் எகின்சி ஆகியோர் குற்றமற்றவர்கள் என கூறி நீதிமன்று விடுதலை செய்தது.

# குழந்தைகள் மீதான வன்முறைக்கு தீவிரவாதமே காரணம்

## ஐ.நாவில் இந்தியா வலியுறுத்து

(ஜெனீவா)

உலகம் முழுவதும் குழந்தைகள் மீதான வன்முறைக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் தீவிரவாதமே காரணமாக இருப்பதாக இந்தியா ஐ.நா. மாநாட்டில் தெரிவித்துள்ளது.

ஆகவே உலக நாடுகள் குழந்தைகளை பாதுகாக்க தீவிரவாதத்தை உறுதியுடன் எதிர்க்க வேண்டும் என குழந்தைகள் மற்றும் ஆயுதப் போராட்டங்கள் என்ற தலைப்பில் ஐ.நாவில் நடைபெற்ற கருத்தரங்கில் இந்தியா மேற்படி குறிப்பிட்டுள்ளது.

தீவிரவாதத்தை தூண்டுவோர், அதற்கு நிதியுதவி அளிப்போர், தீவிரவாதத்திற்கு துணை நிற்போரை கடுமையாக தண்டிக்க வேண்டும் என்றும் தீவிரவாதத்தால் எல்லைப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள் கல்வியைக் கற்க முடியாத சூழல் நிலவுவதாகவும், குழந்தைகளின் கல்வி உரிமையை முன்னிலைப் படுத்தப்பட வேண்டும் என்றும் இந்தியா தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. (2)



...வர்ணிக்கப்படும் அமெரிக்காவின் ...கோபுரத்தின் மீது தாக்குதல் நடந்து ...த நாள் நேற்றாகும்.

## இதயநோயால் உயிரிழப்பவர் தொகை இந்தியாவில் அதிகம்-உலக சுகாதார ஸ்தாபனம்

(டில்லி)

இந்தியாவில் இதய நோயினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அதனை கட்டுப்படுத்துவதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ளவில்லை எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இதயநோய்களைக் கட்டுப்படுத்த உலக நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள உலக சுகாதார ஸ்தாபனம் அவ் அறிக்கையில் மேற்படி தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கையில், "இதய நோய்களைக் கட்டுப்படுத்த இந்தியா உள்ளிட்ட நாடுகள் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. தொழில்ரீதியாக உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களில் சேர்க்கப்படும் தீங்கு விளைவிக்கும் பொருட்களால் இதய நோய்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் 100க்கும் மேற்பட்ட நாடுகள் இந்த தீங்கு விளைவிக்கும் பொருட்களை அவற்றின் உணவுப் பண்டங்களில் இருந்து அகற்ற போதுமான நடவடிக்கையை எடுக்க முன்வர வேண்டும்.

பங்களாதேஷ், பூட்டான், ஈக்வடோர், எகிப்து, இந்தியா, ஈரான், மெக்ஸிகோ, நேபாளம், பாகிஸ்தான் உள்ளிட்ட 11 நாடுகளில் அதிகரித்து வரும் இதய நோய்களுக்குக் காரணமான கொழுப்பு சேர்க்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## ...ட்டமைக்காக ...றைத்தண்டனை

அதேநேரத்தில், பேரிஸ் பெஹ்லிவன் மற்றும் ஹுல் பேரிஸ்பெஹ்லிவன் மற்றும் ஹுல்யா கிலிங்க் ஆகிய இருவருக்கும் தலா 45 மாதங்கள் சிறைத்தண்டனையும், முரார் அகிரல், பெர்ஹட் செலிக் மற்றும் அய்தின் கெசர் ஆகிய 3 பேருக்கு தலா 56 மாதங்கள் சிறைத்தண்டனையும் விதித்து கடந்த புதன்கிழமை தீர்ப்பு அளிக்கப்பட்டது.

எரிக் அகாரர் மீதான வழக்கு தனியாக பிரிக்கப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில் 5 பத்திரிகையாளர்களுக்கு சிறைத்தண்டனை விதித்திருப்பது துருக்கியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (2)

## ஐரோப்பாவின் அகதிகள் முகாமில் பேரழிவு!



(எதென்ஸ்)

ஐரோப்பாவின் மிகப்பெரிய அகதிகள் முகாமில் ஏற்பட்ட தீ விபத்தில், 13 ஆயிரம் பேர் நிர்க்கதியாகியுள்ளனர். இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முகாமின் பெரும்பகுதியை தீ அழித்தது.

இதனால் 13 ஆயிரம் குடியிருப்பாளர்கள் வீடற்றவர்களாக மாறியுள்ளனர். (2)

## அமெரிக்காவில் ஜோர்ஜ் ஃபிளாய்ட் கொலம்பியாவில் ஜேவியர் ஆர்டோனிஸ் தொடரும் அராஜகங்கள்

(பகோட்டா)

கொலம்பியாவிலும் ஜோர்ஜ் ஃபிளாய்ட் போன்ற சம்பவம் அரங்கேறியுள்ளது. இந்த சம்பவத்தை கண்டித்து நடந்த போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில் 9 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவில் கடந்த மே மாதம் ஜோர்ஜ் பிளாய்ட் என்ற கறுப்பினத்தவரை பொலிஸ் கைது செய்ய முற்பட்டனர். அப்போது அவரின் கழுத்தில் பொலிஸ்அதிகாரி தனது முழங்காலை வைத்து நெரித்ததில் அவர் மூச்சுத்திணறி சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார்.

இந்தச் சம்பவத்தால் மாபெரும் போராட்டம் வெடித்தது. அமெரிக்கா மட்டுமின்றி உலகம் முழுவதும் ஜோர்ஜ் ஃபிளாய்ட் கொலைக்கு நீதிகேட்டு போராட்டங்கள் நடைபெற்றன.

இந்நிலையில், கொலம்பியாவிலும் ஜோர்ஜ் ஃபிளாய்ட் போன்ற மற்றுமொரு சம்பவம் அரங்கேறியுள்ளது. அந்நாட்டின் தலைநகர் பகோட்டாவின் எங்கடிவா என்ற பகுதியில் கடந்த 9ஆம் திகதி இரவு நண்பர்களுடன் சென்றுகொண்டிருந்த 46 வயது நிரம்பிய ஜேவியர் ஆர்டோனிஸ் என்ற நபரை பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

அவரை சந்தேகநபராக கருதி கைது செய்ய முற்பட்டனர். இதனால் பொலிஸாருக்கும் ஜேவியருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் பொலிஸாரை ஜேவியரை தரையில் தள்ளி அவரது கழுத்தில் முழங்காலால் அழுத்தினர்.

இதில் அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. அப்போது அவர் 'தயவு நிறுத்துங்கள்' என கூறினார். ஆனால், தொடர்ந்து பொலிஸார் கைது நடவடிக்கையில் குறியாக இருந்தனர்.

இந்த நிகழ்வை ஜேவியரின் நண்பர் தனது செல்போனில் வீடியோவாக எடுத்து சமூக வலைத்தளத்தில் வெளியிட்டார். பொலிஸாரின் கைது நடவடிக்கையின் போது ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக ஜேவியர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தை கண்டித்து கொலம்பியா முழுவதும் பொலிஸாருக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த போராட்டத்தின்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே மோதல்களும் அரங்கேறி வருகிறது.

இந்நிலையில், ஜேவியரின் உயிரிழப்பிற்கு உரிய நீதி வழங்க வேண்டும் என கூறி நடைபெற்று வரும் போராட்டத்தில் வெடித்த வன்முறையில் இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

பொலிஸாரின்துப்பாக்கிச்சூட்டால் தான் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக போராட்டக்காரர்கள் குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

ஆனால், 9 பேர் உயிரிழந்த விவகாரம் தொடர்பாக விரிவான விசாரணை நடைபெற்று வருவதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வன்முறையை கட்டுப்படுத்தும் விதமாக கொலம்பியாவின் பல்வேறு நகரங்களில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. (2)

# உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரையுடன் மருந்துகளை உள்நாட்டில் உற்பத்தி செய்ய தீர்மானம்

(கொழும்பு)

**எதிர்வரும் மூன்று வருடங்களில் நாட்டின் மருந்துத் தேவையில் 50 வீதத்தினை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. சர்வதேச சந்தை மற்றும் பொதுமக்களுக்கு தரமான மருந்துகளை குறைந்த விலையில் வழங்குவதே இதன் நோக்கம் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அத்துடன் அனைத்து தயாரிப்புகளும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரை மற்றும் தரத்திற்கமைய தயாரிக்கப்பட உள்ளன.

மருந்து உற்பத்தி மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தியுள்ளார்.

மேலும், நாட்டில் தற்போதைய மருந்துத் தேவையில் 85 வீதம் இறக்குமதி செய்யப்படுவதாகவும் இதற்கென வருடத்திற்கு 130 பில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாகவும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இதற்கமைய, நாட்டின் மருந்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உள்நாட்டில் மருந்து உற்பத்தியை மேற்கொள்வதன் மூலம் ஆண்டுக்கு 60 பில்லியன் ரூபாய் சேமிக்கப்படுமெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும், வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை மையப்படுத்தி அம்பாந்தோட்டை தொழிற்றுறை பகுதியில் 400 ஏக்கர் பரப்பளவில் மருந்து உற்பத்தியை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மருந்து உற்பத்திகளை மேற்கொள்வதற்கு உலகின் முன்னணி மருந்து நிறுவனங்கள் இணைந்து கொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், அநுராதபுரம் ஓயாமடுவ பகுதியில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கான வர்த்தக வலையமொன்றும் அமைக்கப்பட உள்ளதுடன் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் மருந்தை வழங்குவதற்காக நாடுமுழுவதும் 100 மருந்தகங்கள் அமைப்பது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், வீடுகளுக்கு மருந்துகளை வழங்கும் திட்டம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# திட்டங்கள் கோப்பு வடிவில் இருப்பதால் பயனேதும் இல்லை


(கொழும்பு)

எதிர்காலத் திட்டங்களை வடிவமைத்து கோப்பு வடிவில் வைத்திருப்பதில் எந்தவிதமான அர்த்தமும் இல்லையென ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ தெரிவித்தார்.

அவ்வாறு வடிவமைக்கப் பட்ட திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும் எனவும் அவற்றை செயற்படுத்துவதே இராஜாங்க அமைச்சர்களின் பொறுப்பு எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் இரா ஜாங்க அமைச்சர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித் ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும், எதிர்வரும் ஐந்து வருட காலத்திற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமெனவும் இதற்க மைய, ஆண்டுதோறும் செலவிடப் படக்கூடிய தொகை மதிப்பிடப்பட வேண்டுமெனவும் ஜானாதி பதி இதன்போது தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமது தேர்தல் வாக்குறுதிகளை கருத்தில் கொண்டு, தற்போதைய அரசி யல் கலாசாரத்தை மாற்றிய மைக்க உள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது உறுதியளித்துள்ளார்.

மேலும், கல்வி, விவசாயம், தொழில்நுட்பம், வீடமைப்பு, நீர் வழங்கள், நகரப்புற மேம்பாடு மற்றும் வாழ்க்கைச் செலவு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தத் துறை களில் எதிர்காலத்தில் எழும் பிரச்சினைகள் குறித்து விவா திப்பதற்காக மாதம் ஒரு முறை இராஜாங்க அமைச்சர்களை சந்திப்பதற்கு எதிர்பார்த்துள் ளதாகவும் ஜனாதிபதி இதன் போது தெரிவித்துள்ளார். (2)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மருதுபாண்டியர்

சிவகங்கைக்குப் பக்கத்திலே உள்ள ஒரு கிராமத்திலே ஒரு நாள் அதிகாலை நேரம் ஒரு குதிரையிலே அவர் வந்துகொண்டிருக்கின்றார். முதல் நாள் எதிரிகளோடு போராடி அவர்கள் கையிலே சிக்காமல் தப்பித்து வந்திருக்கின்றார். யார் அவர்? மருதுபாண்டியர். பரோபகார சிந்தை, சிவபக்தி, புலவர்களை ஆதரிக்கின்ற இயல்பு, குடிமக்களை தாய்போல் காப்பாற்றக் கூடிய தகைமை.

இப்படியெல்லாம் இருந்தும் கடைசிக் காலத்திலே அவருக்கும் எதிரிகள். பல தடவை அவரை பிடிக்க பகைவர்கள் முயற்சி செய்தார்கள். முடியவில்லை...ஒரு சமயம் திருக்கோஷ்டியூர் பெருமாள் கோயிலுக்கு எதிரேயுள்ள ஒரு மண்டபத்தில் இவர் தங்கியிருந்தார். அது எதிரிகளுக்குத் தெரிந்தது. ஊர் எல்லைக்கு அவர்கள் வந்துவிட்டார்கள் என்கின்ற செய்தி இவருக்கு எட்டியது. உடனே ஒரு குதிரைக்காரனை கூட அழைத்துக் கொண்டு புறப்பட்டார். வலது கையிலே சிலந்தி உண்டாகி வேதனை கொடுத்தது. அதிலே ஒரு கட்டுப் போட்டுக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

அப்படிப் புறப்பட்டுத்தான் மறுநாள் காலையிலே அந்த கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். ஒரு கூரை வீடு. அதற்கு முன்னால் ஒரு வயதான அம்மா கோலம் போட்டுக் கொண்டிருந்தார். அங்கே போய் குதிரை நின்றது. அந்த அம்மா நிமிர்ந்து பார்த்தார். மருதுபாண்டியருடைய கம்பீரமான தோற்றம் அவர்கள் மனதிலே அன்பை உண்டாக்கியது. "யாரப்பா நீ... உனக்கு என்ன வேண்டும்? " என்று கேட்டார். "அம்மா... எனக்கு பசியும் தாகமாகவும் இருக்கின்றது.ஏதாவது இருந்தால் கொடுங்கள்" என்றார்." இரவு தண்ணீர் ஊற்றி வைத்திருக்கின்ற பழைய சோறு இருக்கு தருகின்றேன் என்றார். அதேமாதிரி அன்பாக உபசரித்தார். அம்மா... இரவு முழுவதும் நான் தூங்கவில்லை...இங்கே மறைவாக ஒரு இடம் கிடைத்தால் குதிரையைக் கட்டிப் போட்டு விட்டு தூங்கலாம் என்று நினைக்கின்றேன். கொட்டகையில் இடம் கொடுத்தார்.

மருதுபாண்டியருக்கு ராஜபோசனத்தை விட அந்தப் பழைய சோறும்... பண்பாடும் மிகவும் பெரிதாகத் தெரிந்தது.அந்த அம்மா கொடுத்த ஓலைப் பாயை வாங்கிக் கொண்டு குடிசைக்குப் பின்பக்கம் போய் குதிரையைக் கட்டினார். பாயை விரித்து படுத்துக் கொண்டார். பக்கத்திலேயே குதிரைக்காரனும் படுத்துக் கொண்டான்.

கண் விழித்த பொழுது சூரியன் உச்சியிலே இருந்தான். அந்தக் கூரை வீட்டிலே சாப்பிட்ட சாப்பாடும் தூங்கின தூக்கமும் உடம்பிலேயும் மனதிலேயும் ஒரு புது உற்சாகத்தைக் கொடுத்தது. நன்றியுணர்வோடு அந்த வயதான அம்மாவைப் பார்த்தார். அவர்கள் காட்டின அன்புக்கு இந்த உலகத்தையே கொடுத்தாலும் ஈடாகாது என்று நினைத்தார். 'அம்மா ... உங்கள் வீட்டிலே ஒரு எழுத்தாணி இருந்தால் கொடுங்களேன்' என்றார். 'என் பிள்ளைகள் ஒரு விசேடத்திற்காக வெளியூர் போய் இருக்கின்றார்களப்பா..அதெல்லாம் எங்கே வைத்திருக்கின்றார்கள் என்று தெரியவில்லை' என்றார். சரி பரவாயில்லை என்று குதிரைக்காரனைக் கூப்பிட்டார்.

'இந்த வீட்டுக் கூரையிலே இருந்து ஒரு பனை ஓலையும் பக்கத்து வேலியிலேயிருந்து ஒரு முள்ளையும் எடுத்துக் கொண்டு வா... என்றார். எடுத்துக் கொண்டு வந்தான் .அந்த கிராமம் பூராகவும் அந்த அம்மாவுக்கே சேர வேண்டியது என்று எழுதி கையெழுத்துப் போட்டார்.

முள்ளாலே எழுதிய அந்த தர்மசாசனத்தை அவர்களிடம் கொடுத்தார். 'அம்மா ...சிவகங்கை சமஸ்தான அதிகாரிகளிடம் இதை நீங்கள் கொடுத்தால் உங்களுக்கு ஏதாவது அனுகூலம் உண்டாகும்' என்று சொல்லிவிட்டு குதிரை மேல் ஏறி போய்விட்டார். ஊரிலிருந்து பிள்ளைகள் வந்ததும்...இதை எடுத்துக் கொண்டு போய் சமஸ்தானத்திலே காட்டலாம் என்று அந்த அம்மா நினைத்தார். ஆனால் அதற்குள்ளே பகைவர்கள் சமஸ்தானத்தைக் கைப்பற்றியதாக செய்தி வந்தது. மருதுபாண்டியரை...அதற்குப் பின்பு பகைவர்கள் பிடித்து சிறையிலே அடைத்துக் கொண்டார்கள். ரொம்பக் காலம் கழித்து அவருடைய கடைசிக்காலத்திலே பகைவருடைய அதிகாரிகள் அவரிடம் கேட்டார்கள். "உங்கள் கடைசி விருப்பம் என்ன சொல்லுங்கள்?" என்று. அப்பொழுது அவர் என்ன சொன்னார் தெரியுமா?

நான் யார் யாருக்கு எந்தக் கிராமத்தை எழுதிக் கொடுத்திருக்கின்றேனோ அதெல்லாம் அவங்க அவங்களுக்குச் சொந்தமாக வேண்டும். அதுதான் என் பிரார்த்தனை வேறு ஒன்றுமே இல்லை என்றார். இதைக் கேட்டதும் அவருடைய விரோதிகள் ஒரு மாதிரியாகிவிட்டார்கள். அவருடைய நன்றியுணர்வுக்கு மரியாதை கொடுத்து அவருடைய இறுதி ஆசையை நிறைவேற்றினார்கள்.மருதுபாண்டியர் கொடுத்த பொருட்கள் எல்லாம் உரியவர்களுக்கு வழங்கப்படுகின்றது என்பதைக் கேள்விப்பட்டு இந்த அம்மா தன்னிடம் இருந்த ஓலையை கொடுத்தனுப்பினார். அந்தக் கிராமம் அவங்களுக்கு கிடைத்தது. அப்படிக் கிடைத்த கிராமம் தான் பழஞ்சோற்றுக் குருநாதனேந்தல்.

தன் வீட்டிலே பழைய சோறு சாப்பிட்டது மருதுபாண்டியர் என்கின்ற விடயமே அந்தம்மாவுக்கு அதற்குப் பின்தான் தெரிய வந்தது.கையிலே கட்டுப் போட்டியிருந்த நிலைமையிலேயும் கூரையிலே இருந்து எடுத்த ஓலையிலே முள்ளாலே முகமலர்ச்சியோடு அவர் எழுதின காட்சி ஞாபகத்திற்கு வந்தது. அந்த அம்மா சாகின்ற வரைக்கும் அதைச் சொல்லிச் சொல்லி ஆச்சரியப்படுவாராம்.

ஒருவர் இரவிலே வந்து ஐயா நான் வெளியூர்க்காரன். இன்றைக்கு இரவு மட்டும் கொல்லைப் புறத்திலே உள்ள கொட்டகையிலே படுத்திருந்து விட்டுக் காலையிலே போய் வீடுகின்றேன். என்றான்.சரி என்றார் வீட்டுக்காரர். இவன் விடிவதற்குள்ளே அங்கே கட்டியிருந்த குதிரையைத் திருடிக் கொண்டு அது மேல் ஏறித்தப்பித்துப் போய் விட்டான். காலையில் எழுத்து பார்த்தார் வீட்டுக்காரர்.

ஏன் சேர் உங்கள் குதிரை காணாமல் போனது உங்களுக்கு வருத்தமாக இல்லையா? என்று கேட்டார். இல்லை என்றார். ஏன் என்றார்கள். காணாமல் போனது குதிரையா இருத்தால் தானே சேர் வருத்தப்பட வேண்டும். அது கழுதை. இருட்டில் அடையாளம் தெரியாமல் ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.நானே அதை யார் தலையில் கட்டலாம் என்று பார்த்துக் கொண்டிருந்தேன் என்றார்.

# எத்தனை கொலைகள் செய்தாலும் எம்.பி.ஆகலாம்

# உலக சாதனை புரிந்த ராஜபக்ஷ அரசு

## தலதா அத்துகோரள சாடல்



**(கொழும்பு)**

**“எத்தனை கொலைகளைச் செய்தாலும் தேர்தலின்போது அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டால் பாராளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை ராஜபக்ஷ அரசு செய்து காண்பித்துள்ளது” இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.**

“வியத்மக” அமைப்பினூடாக புத்திஜீவிகளை உள்ளடக்கிய ஆட்சி முறையை முன்னெடுப்பதாகக் கூறிக்கொண்டு அரசை அமைத்தவர்கள், மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவருக்கு பாராளுமன்ற உறுப்புரிமையை வழங்கி உலக சாதனை புரிந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை மாறுபட்ட பண்புகொண்ட ஒருவராகவே காண்பித்து வியத்மக அமைப்பின் ஊடாகப் புத்திஜீவிகளை உள்ளடக்கிய ஆட்சி முறையை முன்னெடுக்கப் போவதாகவே தெரிவித்து வந்தார்.

அதன் காரணமாகவே மக்கள் அவரை வெற்றிபெறச் செய்தனர். ஆனால், தற்போது புத்திஜீவிகள் இருக்கின்றார்களா? என்பது கேள்விக்குரிய விடயமே. மறுபுறம் மரண தண்டனைக் கைதி ஒருவருக்கு உறுப்புரிமையைப் பெற்றுக்கொடுத்து உலக சாதனையைப் படைத்துள்ளது தற்போதைய அரசு.

இந்தநிலையில் ஜனதிபதி மற்றும் பிரதமர் மீது மக்கள் எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள். மரண தண்டனைக் கைதி ஒருவருக்கு பாராளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ள முடியாது என்று சட்டமா அதிபர் தெரிவித்திருந்தபோதும், அவருக்கு உறுப்புரிமை வழங்கி கறுப்புத் தினமாக அன்றைய தினத்தைக் காண்பித்துள்ளனர்.

எத்தனை கொலைகளைச் செய்தாலும் தேர்தலின்போது அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டால் பாராளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை இந்த அரசு செய்து காண்பித்துள்ளது.

ராஜபக்ஷக்கள் தங்களது குடும்ப அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும், சர்வாதிகாரப் பண்புகளை உள்ளடக்கும் வகையிலும் 2010 ஆம் ஆண்டு அரசமைப்பு திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அதேபோன்று தற்போதும் 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சித்து வருகின்றார்கள்,

காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆட்சி முறையை மீண்டும் கொண்டு வருவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான பலம் பொருந்திய அதிகாரம் ஒன்றை ஜே.ஆர். போன்ற ஒரு நபர் பெற்றுக்கொண்டதால் எந்தச் சிக்கலும் ஏற்படவில்லை. ஆனால், ராஜபக்ஷக்களின் கைகளில் இந்த அதிகாரங்கள் கிடைக்கப்பெற்றால் எதிர்நோக்க வேண்டி ஏற்படும் விளைவுகள் தொடர்பில் கூற முடியாது.

19 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் ஊடாக மக்களுக்கே அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன்போது ஊடகங்களும் சுதந்திரமாகச் செயற்பட்டன. இந்த நிலையில் 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தைக் கொண்டு வந்து தங்களது குடும்ப அதிகாரத்தை மேலும் பலப்படுத்திக்கொள்ள ராஜபக்ஷக்கள் முயற்சித்து வருகின்றனர்.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் அரசு முன்னெடுத்து வரும் செயற்பாடுகளை நாங்கள் வரவேற்கின்றோம்.

இதேவேளை, இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதைத் தடை செய்வதற்கு அரசு எடுத்திருக்கும் தீர்மானத்தையும் வரவேற்கின்றோம். ஆனால், அதற்குள்ளும் ஏதாவது திட்டம் இருக்க வாய்ப்புள்ளது. வெளிநாட்டிலிருந்து மாட்டு இறைச்சியை இந்நாட்டுக்கு எடுத்துவரும் உயர்நிலை நபரொருவருக்கு வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்காக இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதா? என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

பௌத்த நாடான இலங்கைக்கு மரண தண்டனைக் கைதி ஒருவருக்கு பாராளுமன்ற உறுப்புரிமையை வழங்குவதைப் பார்க்கிலும், இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதால் பாரியதொரு பாவம் வந்து விடாது என்றே நான் எண்ணுகின்றேன்” என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## 24 கட்சிகளின் விண்ணப்பங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிப்பு?

(கொழும்பு)

இலங்கையில் புதிதாகப் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்த 162 அரசியல் கட்சிகளில் இருந்து 24 கட்சிகளின் விண்ணப்பங்களை மாத்திரமே தேர்தல்கள் ஆணைக்குழு அங்கீகரிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் தற்போது 70 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் பதிவில் உள்ள நிலையில் புதிதாக பதிவு செய்வதற்காக 162 அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் விண்ணப்பித்திருந்தன.

இவ்வாறு விண்ணப்பித்த 162 விண்ணப்பங்களில் படிவ பரிசோதனையின்போதே 40 அரசியல் கட்சிகளின் படிவங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

122 அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு நேர்முகத் தேர்விற்கும் அழைக்கப்பட்டன.

இவ்வாறு நேர்முகத்தேர்விற்கு உட்படுத்தப்பட்ட கட்சிகளில் இருந்தும் 27 அரசியல் கட்சிகளின் விண்ணப்பங்கள் தவிர்ந்து ஏனையவை நிராகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

27 அரசியல் கட்சிகளில் 20 கட்சிகள் இரண்டாம் நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதேபோன்று இரண்டாம் நேர்முகத் தேர்விற்கு மேலும் ஏழு அரசியல் கட்சிகள் அழைக்கப்படவுள்ளன.

இவ்வாறு அழைக்கப்படவுள்ள 7 அரசியல் கட்சிகளின் இரண்டாம் நேர்முகத் தேர்வுடன் கட்சிகள் மீதான ஆய்வு நிறைவுபெறும்.

இவ்வாறு இடம்பெற்ற ஆய்வுகள், நேர்முகத் தேர்வுகளின் அடிப்படையில் சுமார் 24 அரசியல் கட்சிகள் மட்டுமே பதிவுக்கு ஏற்றுக்கொள்ளும் நிலைமை காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## மிகவும் சிரமப்பட்டு பெற்றுக்கொடுத்த சுதந்திரம் 20வது திருத்தத்தால் பறிபோவதை பார்க்க முடியாது

(கொழும்பு)

20ஆவது திருத்தச் சட்டம் காரணமாக மிகவும் சிரமப்பட்டு நாட்டுக்கு பெற்றுக்கொடுத்த சுதந்திரம் மற்றும் பலம் இல்லாமல் போவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

மினுவங்கொடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் “20ஆவது திருத்தச் சட்டம் காரணமாக மிகவும் சிரமப்பட்டு நாட்டுக்கு பெற்றுக்கொடுத்த சுதந்திரம் பலம் இல்லாமல் போகும் விதத்தை பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை என்பதால் 20ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்க்கின்றோம்.

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் ஊடாக நாடு முன்னோக்கி செல்லவில்லை என்ற குற்றச்சாட்டு தவறானது. இது 19ஆவது திருத்தச் சட்டத்தின் தவறல்ல.



அன்றைய தலைவர்களாக இருந்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் பலவீனம் காரணமாக அதனை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாமல் போனது” தான் காரணம் எனவும் சரத் பொன்சேகா தெரிவித்தார். (2)

## பசுக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பால் உற்பத்தியும் பாதிப்பு

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 இல் இலங்கையில் கறவைப் பசுக்களின் எண்ணிக்கை 1.8 வீதத்தாலும், கறவை எருமை மாடுகளின் எண்ணிக்கை 2.8 வீதத்தாலும் குறைவடைந்துள்ளது.

மத்திய வங்கியின் வருடாந்த ஆண்டறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 2019 ஆம் ஆண்டில் தேசிய பால் உற்பத்தியும் 6.3 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

தேசிய முட்டை உற்பத்தி, கோழி இறைச்சி உற்பத்தி ஆகியன 2019 இல் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (2)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

65

கலாநிதி முருகர் குணசிங்கம்

ஈழத்தமிழர்களின் அரசியல் விடயங்களில் அவர்கள் அக்கறை காட்டியதாக ஆதாரங்கள் காணப்படவில்லை. 1950 களில் ஈழத்தமிழர்களது அரசியல் உரிமைகள் சிங்களப் பெரும்பான்மை அரசினால் திட்டமிட்டுப் பறிப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் தமிழர் தாயகப் பகுதிகள் நீர்ப்பாசன வளர்ச்சித் திட்டங்கள் என்ற நடவடிக்கை மூலம் பறிக்கப்பட்டபோதும் மேற்கண்ட இரு பகுதியினரும் அதற்காகக்குரல் கொடுக்கவில்லை.

குறைந்தபட்சம் அக்கால கட்டத்தில் பிரித்தானியாவில் வாழ்ந்தவர்களது மேற்கண்ட பிரச்சினைகளை பிரித்தானிய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கலாம்.

அவர்கள் அவ்வாறு செய்ததாக எதுவித ஆதாரங்களும் காணப்படவில்லை. தம்மைப் படித்தவர்கள், மேல்தட்டு வர்க்கத்தினர் எனக் கூறிக்கொள்ளும் ஈழத்தமிழர்கள் அநேகமாகத் தமிழர்களின் இன்றைய அரசியல் தலைவிதிக்கும் சிங்கள அரசுக்கும் பல்வேறு வழிகளில் துணைபோனவர்களாகவே இருந்துள்ளனர் என்பதே வரலாறு.

அல்லது தமிழர் அரசியல் பிரச்சினையில் இருந்து விலகியே இருந்தனர் என்று கூறுவதும் தவறு ஆகாது.

ஆனால் 1977, 1979, 1981, 1983 களில் ஈழத் தமிழருக்கு எதிராக சிங்கள அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலையின் விளைவாக சிங்கள அரசே புலம்பெயர் ஈழத்தமிழர் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது.

அவர்கள் நடத்திய இனப்படுகொலைகள் காரணமாக நடுத்தர, கீழ்மட்டத் தமிழ் மக்கள் இலட்சக்கணக்கில் தமிழ் ஈழத்தை விட்டும் இலங்கையை விட்டும் பல்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து அகதிகளாகச் சென்றமை, ஈழத் தமிழர்களது அரசியலில் பாரிய தாக்கத்தையும் விளைவுகளையும் ஏற்படுத்தத் தவறவில்லை.

அவ்வாறு சென்றவர்களே தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையின் கீழும் போராட்டம் நடைபெறுவதற்குத் தம்மைப் பல்வேறு வழிவகைகளில் அர்ப்பணித்தவர்கள் என்பதனை எவரும் மறுக்க முடியாது.

அத்தோடு அவர்கள் சார்ந்த அமைப்புகள், தாம் வாழும் நாடுகளில் பல்வேறு அரசியல் திட்டங்களை முன்னெடுத்துச் சென்று ஈழத்தமிழர்களின் அனைத்துத் தரப்பினரையும் தமது செயற்றிட்டங்களில் இணைந்து பங்கெடுக்கச் செய்து தமிழ்த் தேசிய வாதத்தையும் அதன் எழுச்சியையும் உலக அரங்கில் நிலை நிறுத்தின.

எனவே அவ்வாறான அரசியல் அமைப்புகள் பற்றியும் அவற்றின் செயற்பாடுகள், மக்களின் பங்களிப்புகள் குறித்தும் அவர்களின் விலைபோகாத தேசப்பற்று குறித்தும் இந்தக்கட்டுரையில் சுருக்கமாக ஆய்வு செய்வது பொருத்தமானது ஆகும்.

1915களில் முதலாம் உலகப் போர் தீவிரம் அடைந்த நேரத்தில் மலேசியா வாழ் ஈழத்தமிழர்கள் பணம் சேர்த்து ஒரு போர் விமானம் வாங்கக்கூடிய தொகையை பிரித்தானிய வான்படை அதிகாரியிடம் வழங்கி அப்பணத்திற்குப் போர் விமானம் வாங்கி அவ்விமானத்திற்கு "யாழ்ப்பாண விமானம்" **"Jaffna Plane"** எனப் பெயரிடப்பட்டுள்ளது.

ஆனால் ஈழத்தமிழர்களின் வாழும் உரிமை இலங்கையில் மறுக்கப்பட்டு இன அழிப்புக்கு உள்ளானபோதும் ஈழ விடுதலைப் போராட்டம் எழுச்சி அடைந்த போதும் மலேசியா வாழ் தமிழர்களால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாமல் போனது.

மலேசியாவில் உள்ள ஈழத்தமிழர்களுள் மூவர் உலகக் கோடீஸ்வரர்கள் வரிசையில் முன்னணியில் நிற்கின்றார்கள்.




மேலும் பலர் மிகவும் செல்வந்தர்காக வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால் அவர்களாலும் ஈழ விடுதலைப் போராட்டத்திற்குப் பெரிதாக ஒன்றும் செய்ய முடியவில்லை.

இருந்தும் குறிப்பிடத்தக்க சிலர் தங்கள் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளார்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

எடுத்துக்காட்டாக சிலோன் தமிழ்ச் சங்கம் **(Ceylon Tamil Association)**, மலேசியன் தமிழ் காங்கிரஸ் **(Malaysian Tamil Congress)**, தமிழ் உதவி நிதியம் **(Ceylon Relief Fund)** ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஆனால் மலேசியத் தீபகற்பத்தில் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழ் நாட்டுத் தமிழர்கள் ஈழ விடுதலைப் போராட்டத்திற்குத் தமது பாரிய பங்களிப்பை வழங்கி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1957 ஆம் ஆண்டு பிரித்தானியப் பேரரசின் பிடியில் இருந்து மலேசியா விடுதலை பெற்றபின் அங்குள்ள அரசியல் நிலைமை ஈழத்தமிழர்களை வெளிப்படையாக அரசியலில் ஈடுபட முடியாத ஒரு நிலைமையைத் தோற்றுவித்து இருந்தது என்பதனையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

எண்ணிக்கையில் சிறு தொகையினரான ஈழத்தமிழர்கள் புவியியல் அடிப்படையில் பல்வேறு நாடுகளில் பரந்து விரிந்து வாழ்வார்கள் என்றோ ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு உதவுவார்கள் என்றோ இலங்கை அரசு எதிர்பார்த்திருக்க முடியாது.

எப்படியாவது ஈழத்தமிழரை குறிப்பாக இளம் தலைமுறையினரை நாட்டை விட்டுத் துரத்தி விட்டால் ஈழப்போராட்டம் நிலை குலைந்து விடும் என்றே அவர்கள் கருதி இருந்தனர். எனினும் அவர்களது நடவடிக்கைகள் ஈழப்போராட்டத்தை வலுப்பெறச் செய்யும் என்பதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

1983 இன் பின் நிகழ்ந்த இலங்கை அரசின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்தால் இந்நிலைமையைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

1975 இல் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகள் ஈழத்தமிழர்களைப் பொறுத்து மிக ஆபத்தானதொன்று என்று சிந்தித்த லண்டன் வாழ் படித்த தமிழ் மாணவர்கள் தொலை நோக்குப் பார்வையுடன் ஈழப் புரட்சிகர அமைப்பாளர்கள் **(Eelam Revolutionary Organizers)** என்னும் அரசியல் அமைப்பினை முதன்முதலாகத் தொடங்கினர்.

1977 இல் இலங்கையில் நிகழ்ந்த இனக்கலவரத்தின் மோசமான நிலைமையைத் தொடர்ந்து ஈழத்தமிழர்களின் நிலைமையினை உலகின் பார்வைக்குக் கொண்டு செல்லவும் ஈழத்தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்தவும் சில சமூக, அரசியல் அமைப்புகள் தோற்றம் பெற்றன.

குறிப்பாக அமெரிக்காவில் தோற்றம் பெற்ற "இலங்கைத் தமிழ்ச் சங்கம்" ஐக்கிய இராச்சியத்தில் தோற்றம் பெற்ற "தமிழ் பேசும் மக்களின் நிரந்தரச் செயற்குழு" **(Standing Committee of Tamil Speaking People)** அவுஸ்திரேலியாவில் தோற்றம் பெற்ற இலங்கைத் தமிழர் சங்கம் **(Ceylon Tamil Association - CTA)** இவ்வமைப்பின் பெயர்.1982 இல் ஈழத்தமிழர் சங்கம் **(Eelam Tamil Association - ETA)** மேற்கண்ட மூன்று சங்கங்களின் கிளைகள் அந்தந்த நாடுகளிலும் ஈழத் தமிழர்கள் வாழும் ஏனைய நாடுகளிலும் தொடங்கப்பட்டு விரிவடைந்து செல்வதையும் ஈழத்தமிழர் துயர் துடைப்பு வேலைத்திட்டங்களையும் சமூக, கலை, மொழி, அரசியல் சார்ந்த முக்கிய வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துச் சென்றதையும் பார்க்க முடிகின்றது.

ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் மேற்கண்ட வேலைத் திட்டங்களிலும் செயற்பாடுகளிலும் முன்னோடிகளாகத் திகழ்ந்ததையும் தமது நோக்கங்களை நிறைவேற்றிடத் தொடர்ந்து பணி ஆற்றி வருவதனையும் அறிய முடிகிறது.

இவ்வேளையில் தமிழ் ஈழத்தில் தோற்றம் பெற்ற சில அரசியல் இயக்கங்கள் பற்றியும் பார்வையைச் செலுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது.

அவ்வாறான அமைப்புகளின் கிளைகள் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்த நாடுகளில் 1983 இற்குப் பின்னர் தோற்றம் பெறத் தொடங்கியதற்கான பின்னணிக் காரணிகள் ஆகும்.

1970களில் இலங்கை அரசு பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வுகளில் தமிழ் மாணவர்களுக்கு வாய்ப்புகளை மறுக்கின்ற வகையில் தரப்படுத்துதல் முறையை **(Standardisation)** அறிமுகப்படுத்தியது.

இதன் விளைவாக பல தமிழ் மாணவர்கள் குறிப்பாகத் கணிசமான யாழ்ப்பாணக் குடாநாட்டு மாணவர்கள் மருத்துவம், பொறியியல் துறைகளில் கல்வி கற்பதற்காகப் பல்கலைக்கழக அனுமதியைப் பெற முடியவில்லை.

இதனால் வெறுப்புற்ற தமிழ் மாணவர்கள் "தமிழ் மாணவர் பேரவை" என்ற அமைப்பினை 1970களில் தோற்றுவித்தனர்.

பின்னர் அவ்வமைப்பு பல்வேறு அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடத் தொடங்கியது.

1972 ஏப்ரலில் தமிழ் மிதவாதக் கட்சிகளான தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி மூன்றும் ஒன்றாக இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி **(Tamil United Front)** என்னும் கட்சியைத் தோற்றுவித்தனர். இக்கட்சியின் அரவணைப்பில் தமிழ் இளைஞர் பேரவை **(Tamil Youth Federation)** என்னும் அமைப்பு தோற்றம் பெற்றது.

பின்னர் இடதுசாரிப் போக்கைக் கடைப்பிடித்ததால் அமைப்பில் இருந்து சிலர் வெளியேறினர்.

(தொடரும்)

# பிரேமலால் பற்றிய எண்ணக்கரு முற்றுப்புள்ளி வைத்த ஜனாதிபதி

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது சீர்திருத்தத்தின் நோக்கம் 19 ஆவது திருத்தம் மூலம் விதிக்கப்பட்டுள்ள தடைகளை களைந்து முன்னோக்கிச் செல்வதாகும்.

இருபதாவது அரசியலமைப்பு சீர்திருத்தம் மற்றும் பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவிற்கு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சி மற்றும் அதன் ஆதரவாளர்கள் மக்கள் மத்தியில் பரப்பி வருகின்ற கருத்துக்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் பதிலளித்த போது இவ்வாறு தெரிவித்தார்.

"அனைத்தையும் ஒரே தடவையில் மாற்ற முடியாது. அதற்கு நீண்டகாலம் எடுக்கும். பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. 19 ஆவது சீர்திருத்தத்தின் சில விடயங் களை அவ்வாறே வைத்துக் கொள்ள வேண்டும்.

முதன்மையான நோக்கம் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை மாற்றாது எதிர்கால வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதாகும்" என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர பற்றி எதிர்க்கட்சி முன்வைக்கின்ற குற்றச்சாட்டு பற்றி அவதானத்தை செலுத்திய ஜனாதிபதி தாமோ அல்லது பிரதமரோ நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு எவ்வித தலையீட்டையும் செய்யவில்லை என்று குறிப்பிட்டார்.

"தலையீடு செய்வதாயின் உயர் நீதிமன்றத்திலேயே செய்ய வேண்டி இருந்தது. அவ்வாறானதொரு விடயம் எச்சந்தர்ப்பத்திலும் இடம்பெறவில்லை.

நீதிமன்றத் தீர்ப்பை வழங்கிய நீதிபதியை அரசியலமைப்பு பேரவையே நியமித்தது. கரு ஜயசூரிய, சஜித் பிரேமதாஸ, தலதா அதுகோரள உள்ளிட்ட சிலரே அதில் இருந்தனர். எதிர்க்கட்சிக்கு ஒரு தீர்ப்பு நல்லது மற்றையது கெட்டது" என்று விபரித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியை நியமித்ததும் அந்த அரசியலமைப்பு பேரவையே என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி எதிர்க்கட்சி பொய்யான பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (2)

# கருவே கட்சித் தலைவர்; ருவானுக்கு வழங்கினால் நான் ஐ.தே.கவை விட்டு உடனடியாக வெளியேறுவேன்

## மேர்வின் சில்வா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட் சியின் புதிய தலைவராக கருஜயசூரிய நியமிக் கப்பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகவியலாளர் களின் கேள்விகளுக்கு பதில ளிக்கும் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், 'ரணில் விக்கிரமசிங்க சிறந்த தலைவர், அவர் தலைமைப்பதவியில் நீடி ப்பதற்கு எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

எனினும், புதிய தலைவர் தொடர்பில் பேசப்படுவதால் அப்பதவிக்கு தற்போதைய சூழ்நிலையில் கரு ஜயசூரி யவே பொருத்தமானவர்.

அவரை தலைவராக நியமித்து கட்சியை மீட் டெடுத்து அடுத்த தலைவர் பற்றி சிந்திக்கலாம். கருஜயசூரிய அரசியலில் அடிமட்டத்தில் இருந்து வந்தவர். எனவே, கட் சியை நிச்சயம் மீட்டெடுப்பார்.



ருவானுக்கு தலைமைப் பதவி வழங் கப்பட்டால் அதனை நான் கொள்கை ரீதியில் ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

ருவானால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கூட நான் பங்கேற்க வில்லை. எனது எதி ர்ப்பையும் மீறி நியமனம் பெற்றால் ஐ.தே.கவை விட்டு விடைபெறுவேன்" எனக் குறிப்பிட்டுள்ளார். (2)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2113

### வைஷா



இலக்கை அடைய வேண்டுமென்றால்
இழப்பை ஏற்றுக் கொள்ளப் பழகு.
விழுந்து எழாதவர் வாழ்க்கையில் வென்றதாய்
சரித்திரமில்லை.


### யாதவி



காண்கின்ற காட்சியில் இல்லை வாழ்க்கை
காணும் விதத்தில் உள்ளது- நிதர்சனம்

### றணுஜன்

மூளையின் மடிப்புகளுக்கு ஏற்றவாறு
ஒருவரின் அறிவு!
முகத்தின் சுருக்கத்திற்கு ஏற்றவாறு
ஒருவரின் அனுபவம்!




### சாமந்தி

முதுகில் ஏகப்பட்ட
அழுக்கை சுமந்து
கொண்டு
முன் கடந்து
செல்பவனின்
முதுகை
உன் கண் பார்த்து
நகைப்பது தான்
உலகம்!



### அர்ச்சுன்

ஒரு நன்மை
விளையும் அதே
வேளையில் பல
நன்மைகளை
சில
தீமைகள் வந்து
அறுவடை
செய்து
விடுகின்றது.



### துர்ஷாயினி

பிறர் வெடிவெடிக்கும் போது
உங்களுக்கு எரிச்சல் அல்லது
கோபம் வந்தால் உங்களுக்கு
வயதாகிவிட்டது என்று அர்த்தம்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–213

## இலக்கை நோக்கிய தொழிற்றுறையின் மறுமலர்ச்சி



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 226


**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

புதிய அரசாங்கத்தின் வருகை மக்கள் மனதில் பல நம்பிக்கைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கு சமநிலையான வலுவான அரசாங்கத்தை மக்கள் கடந்த தேர்தலில் தங்கள் வாக்குகளையிட்டு ஆணையுமிட்டு தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள். இதன்மூலம் இத்தேசத்திற்கு ஒரு அபிவிருத்தியுடனான சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கின்றது. இது சமகாலத்தின் தேவையாகவும் இலக்கை நோக்கிய தொழிற்றுறை மறுமலர்ச்சியை அடைவதற்கான கால்கோலாகவும் அமையப் பெற்றிருக்கின்றது. சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை உருவாக்க வேண்டியது சமகாலத்தின் தேவையும் கூட. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் தொழிற்றுறையின் விருத்தியுடன் கட்டியெழுப்பப்பட வேண்டியதன் அவசியமும் அதன் மூலம் வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும் வேண்டிய நிலைக்குள் நாம் உள்ளார்ந்திருக்கின்றோம். 2009 இற்குப் பின்னரான அபிவிருத்தியில் அகலப் பாதை மற்றும் காப்பெற் வீதிகள் அமைக்கப்பட்டமையும் நாடு பூராவுமுள்ள முக்கிய பாதைப்போக்குவரத்தில் பாரிய அபிவிருத்தி ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எமது நாட்டின் வளங்களை முழுமையாக இனங்கண்டு அதனை இருக்கின்ற மனிதவளத்தினை வலுவூட்டுவதனூடாக புதுமையை உள்ளடக்கி அதிலும் கேள்வியும் பயன்பாடுமுள்ள தரமான உற்பத்திப் பொருட்களாக எமது நாட்டின் நாமம் (Brand) தாங்கி உலக சந்தையில் போட்டி போடக்கூடியதாக உருவாக்க வேண்டும்.

இதற்காக வலுவுள்ள ஆற்றல் மிக்க இளையவர்களைக் கொண்ட மனிதவளம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. 50 ஆயிரம்பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வேலைவாய்ப்பு இவ்வாறான பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்பும் இயக்க சக்தியை மையப்படுத்தியே நடந்தேறியிருக்கின்றது. பல்துறைகள் சார்ந்ததாக உள்வாங்கப்பட்டிருக்கும் இப்பாரிய மனித சக்தி பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துவதற்கான ஆக்க சக்தியாக பரிணமிக்கும் என நம்பலாம். இந்த பாரிய மாற்றம் நிச்சயமாக கைத்தொழிலிலும் வர்த்தகத் துறையிலும் அபிவிருத்தியை விரைந்து ஏற்படுத்தும் என நம்பலாம். இதற்காக ஒரேநேரத்தில் உள்வாங்கப்பட்டிருக்கும் அதிகளவிலான பட்டதாரிகளான மனித வளத்தை சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கான பொறிமுறைகளை அந்தந்த அமைச்சுக்களும் திணைக்களங்களும் உருவாக்கி அதன் மூலம் தம்மை வலுவுள்ளதாக மாற்ற வேண்டும். இது வலுவான இலங்கையை முன்னின்று வழிநடத்திச் செல்ல உதவியாக இருக்கும். இவற்றுடன் பட்டதாரிகளல்லாது வேலையற்றிருக்கும் பல இளைஞர்,யுவதிகளுக்கான தொழில்வாய்ப்பும் இங்கே அவசியம் ஆழமாக கணக்கிலெடுக்கப்பட்டல் வேண்டும். பள்ளிப்படிப்பை இடைநிறுத்தியோர், க.பொ.த.சாதாரண மற்றும் உயர்தரத்துடன் இருக்கும் இளையவர்கள், ஏதாவது ஒன்றைப்படித்தால் ஏதாவதொரு வேலை கிடைக்கும் என்னும் நப்பாசையில் தொழில் கல்வி கற்றோர் என பல இளையவர்கள் திறமைகள் பல இருந்தும் அவர்களது திறமைக்கான வேலை கிடைக்காமல் அங்கலாய்ப்பதும் வேலையற்று இருப்பதனையும் அவதானிக்க முடிகின்றது. இவர்களது விரக்தி நிலைக்கான சந்தர்ப்பங்களை தகர்ப்பதற்கான அணுகுமுறைகள் கலந்தாராயப்பட்டு அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப்படல் வேண்டும். முழுமையான மனிதவளத்தை செழுமையாக பயன்படுத்துவதற்கான சீர்மிகு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

எமது நாட்டிலுள்ள உள்ளூர் வளங்களை முழுமையாக இனங்கண்டு அவற்றை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும் அவற்றை முதலீடாக கொண்டு சுதேச தொழில் முயற்சிகளை மேலும் வலுவூட்டுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தல் வேண்டும். எமது வழக்கிலிருக்கும் பாரம்பரிய நடைமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை மேலும் வலுவூட்டி நடைமுறைப்படுத்தக் கூடியவற்றை மையப்படுத்தி எமது நாட்டினது அபிவிருத்தியை மேற்கொண்டு விரிவாக்கிச் செல்வது சாலப்பொருந்தும். மேலும் தற்போது உலக மக்கள் அனைவரையும் அவதிக்குள்ளாக்கிய கொரோனா வைரஸின் தாக்கத்தினால் நாமனைவரும் கற்றுக்கொண்ட பாடங்கள் பல. உடல் ரீதியான நோய்கான எதிர்ப்பு சக்தியை அனைவரிடத்திலும் அதிகரிப்பதற்கான வழிமுறைகளை அனைவரும் பெறக்கூடியதாக ஏற்படுத்தல் வேண்டும். ஒவ்வொருவரிடமுமுள்ள நோயெதிர்ப்பு சக்தியினை அதிகரிப்பதென்பது பாரம்பரிய முறைகளூடான உணவு, மருத்துவம் இன்னும் உடலை சீராக நோயற்றதாக வைத்திருப்பதற்கான யோகக்கலை என்பனவற்றுடன் இயற்கையுடனான வாழ்க்கையையும் நாம் மேன்மைப் படுத்தல் வேண்டும். இவற்றையே சுற்றுலா வருகின்ற வெளிநாட்டவர்கள் விரும்புவதாகவும் இருக்கின்றது.

சுற்றுலாத்துறையை(Tourism) மேன்மைப்படுத்துவதற்கான வழிவகைகள் கைத்தொழில் சார்ந்த அபிவிருத்திக்குள்ளே பின்னிப்பிணைந்து இருக்கின்றதனை நாம் அவதானிக்கலாம். குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சிகளை மென்மேலும் விருத்தியடைய வைத்தால் அதிலீடுபடுகின்ற மக்களை அவர்களது வாழ்வாதாரம் சிறக்கவும் வாழ்க்கைத்தரம் மேம்படவும் இன்னும் மக்களை அபிவிருத்தியின் செயலூக்கத்தினுள் உள்ளீர்க்கவும் முடியும். இவ்வாறான செயற்றிறனுக்குள் மக்களை குறிப்பாக இளையவர்களை அதிலும் பட்டதாரிகளை இணைத்தால் எமது பிரதேசத்து வளங்களை சரியான முறையில் இனங்கண்டு அவற்றை மையப்படுத்திய கைத்தொழிலை மேம்படுத்த வாய்ப்புக்கள் உண்டு. வளங்களை சரியாக இனங்கண்டால் மட்டுமே அவற்றை பயன்படுத்தி உருவாக்கப்படும் தொழிற்றுறைகளுள் இளையவர்களுக்கான தொழில் வாய்ப்பு, புத்தாக்கம், புதியன புகுதலுக்கான வாய்ப்புக்கள் என்பனவற்றோடு எமது பிரதேசத்திலிருந்து எமது நாட்டின் நாமத்தைக் (Branding) கொண்டு இலங்கையில் உருவாக்கப்பட்டது (Made in Sri Lanka) என்னும் அடையாளத்துடன் உலக சந்தையில் இடம் பிடிக்கும் பொருட்களை உருவாக்குவதற்கான வாய்ப்புக்கள் எமக்கு வந்து சேரும். எமது உற்பத்திப்பொருட்கள் உலக சந்தைக்குச் சென்றாலன்றி எமது அந்நிய செலாவணியை எந்த விதத்திலும் உயர்த்தி விட முடியாது. எமது நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களிலிருந்தும் உற்பத்தியாகும் உலகத்தரம் வாய்ந்த உற்பத்திப் பொருட்களும் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களும் தரமானதாக சிறந்த பொதி செய்தலூடாக விற்பனைக்கு செல்லும்போது எமது நாட்டுக்கான சுபீட்சத்தின் வாயில் திறக்கப்படுகின்றது எனலாம்.





வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும் நெல்லுயர குடியுயரும் குடியுயரகோன் உயர்வான் என்பதன் அர்த்தத்தை நாம் முழுமையாகப் புரிந்து கொண்டால் விவசாயத்தின் வளர்ச்சியும் உற்பத்தியின் பெருக்கமும் தொழிற்றுறையின் மேண்மையும் எமக்கான சுயசார்பு பொருளாதாரத்தை பரந்துபட்ட அளவில் உயர்த்திவிடும் தூண்களாகவே நாம் கருத வேண்டும். இவற்றுக்கான அடித்தளத்தை நாம் முழுமையாக உருவாக்குதல் அபிவிருத்தியின் செயலூக்கத்திற்கு உறுதுணையாக இருக்கும். வறுமைக்கோட்டிலிருக்கும் வழி தெரியாது திகைத்திருக்கும் மக்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்துதல் அவர்களையும் உற்பத்தியின் தூண்களாக மாற்றுவதற்கு உதவும். இந்நாட்டின் அனைத்து மக்களுக்குமான அனைத்து வசதி வாய்ப்புக்களும் செய்து கொடுக்கப்படல் வேண்டும். அவரவர் திறமைக்கேற்ப தொழிற்சாலைகள் அமைக்கப்படல் வேண்டும். அதிலும் சூழலுக்கிணைவான தொழில்நுட்பம் விரைந்து பயன்பாட்டிற்கு உள்ளாக வேண்டும்.

இயற்கை வழி வாழ்க்கையை மீண்டும் எமது மக்கள் நினைத்துப்பார்த்திருக்கும் இந்நேரத்தில் அனைவருக்கும் உணவு அதனையும் சமநிலையான ஊட்டச்சத்தான உணவாக கிடைக்க வழி செய்தல் வேண்டும். தொழில்நுட்பங்களின் விருத்தி மிகவும் முக்கியமான வசதியாக தற்போது கருதப்படுகின்றது.

இது தொழில்நுட்ப உலகினுள் அனைவரும் உள்ளார்ந்து பயணிப்பதற்கு வழிசமைக்கும். இளையவர்களின் ஆக்க சக்தியை முழுமையாக பயன்படுத்துவதற்கான வழி வகைகள் செயற்படுத்தப்படும் போது நாம் எதிர்பார்க்கின்ற சுபீட்சமான இலக்கு விரைந்து எட்டப்பட்டு விடும். நாம் நாமாக எமக்காக என்னும் தாரக மந்திரம் உயர்ந்து ஒலிக்க வேண்டும். வாருங்கள் எம்மால் முடிந்தவற்றை நாம் செய்வோம். நன்றே செய்வோம் அதனையும் இன்றே செய்வோம்.

# உடைந்து விழுந்த பாலம்



(புத்தளம்)

புத்தளம் அநுராதபுரம் வீதியில் 38 ஆம் கட்டை பகுதியில் உள்ள பாலம் உடைந்தமை காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் சாரதிகள் மாற்று வழியை பயன்படுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

பாரவூர்தி பயணித்த போதே இந்த பாலம் உடைந்து விழுந்ததாக குறிப்பிடப்படுள்ளது. (2)



# ஆன்மீகம்

## மாற வேண்டியவை மனோபாவங்களே!

வாழ்க்கை ஒரு புதிர் போன்றது. அதேசமயம் வாழ்க்கைக்கு நானும் ஒரு புதிர்தான்!' என்றார் அறிஞர் ஒருவர். காலம் அறிந்து, செயலாற்றும் களம் அறிந்து, விழிப்புணர்ச்சியுடன் அளவான அடிகள் எடுத்து வைத்தாலும் சில சமயம் நம்மையும் மீறி எதிர்பாராத விபத்துகள் ஏற்பட்டு விடுகின்றன. அவ்வாறே அதிகமாக முயற்சி செய்யாத சிலருக்கு அபாரமான வெற்றிகள் அதுவாகவே அமைந்து விடுகின்றன. இதைத்தான் போன ஜென்ம பாவம் என்றும், பூர்வ ஜென்ம புண்ணியம் என்றும் நம் சாஸ்திரங்கள் புகலுகின்றன. இதிகாசம், புராணம் போன்றவற்றில் இதற்கான எடுத்துக்காட்டுகள் பல இருந்தாலும் நடைமுறை வாழ்க்கையில் பல சம்பவங்களை நாம் சந்தித்திருக்கிறோம்.

சாதனை புரியவேண்டிய காலகட்டத்தில் என்ன காரணத்துக்காகவோ மனமாற்றம் ஏற்பட்டு குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையைவிட்டு நாம் விலகி விடுகிறோம். ஆனால், நம்முடைய இடத்திற்கு வரும் வேறொருவர் அந்த சாதனையைப் புரிந்து அதற்காக விருதுகளும், சிறப்புகளும் பெறுகிறார். திரும்பிப் பார்க்கும் நாம், 'அடடா, நல்ல வாய்ப்பை நழுவ விட்டுவிட்டோமே!' என்று மனம் குமைகிறோம். வெகுநாட்கள், ஏன் வருடக்கணக்காக கூட அந்த சூழ்நிலையில் சாதனை புரியவேண்டிக் காத்திருந்த நமக்கு அந்த வாய்ப்பு அமையவில்லை.

ஆனால், நாம் அந்த இடத்தைவிட்டு அகன்ற பிறகு, வெகு சமீபத்தில் நம் இடத்தை நிரப்பிய ஒருவர் அதே சாதனைக்காகப் பாராட்டு பெறுகிறார் என்றால் இதற்கு என்ன அர்த்தம்? காலங்காலமாகக் காத்திருந்து, விரக்தியில் நாம் வெளியேறியது தவறா? அல்லது அது, நம்முடைய அந்த இடத்தை அப்போதுதான் பற்றிக் கொண்டவருடைய அதிர்ஷ்டமா? தர்க்க ரீதியாக இதற்கு என்ன சமாதானம் கூற இயலும்? எனவே, இப்படி வாழ்வில் ஏற்படும் ஏற்றங்களுக்காக எகிறிக் குதிப்பதோ மாற்றங்களுக்காக மனம் சோர்வடைவதோ இல்லாமல் வருவதை எதிர்கொள்வதும் ஏற்றுக் கொள்வதுமாக நாம் நம் மனோ பாவங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

**'உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது**
**வல்லவன் வகுத்ததடா- கர்ணா**



**வருவதை எதிர்கொள்ளடா'**

என்று கண்ணன் கூறுவதாக கண்ணதாசன் கூறியதை நாம் சிந்தனையில் கொள்ள வேண்டும். அயோத்தி நகரத்தில் அனைவரின் கருத்தும் ஒன்றாகவே இருந்தது: 'அது ஸ்ரீராமனுக்கு நாளை முடிசூட்டு விழா!' ஆனால் அடுத்த நாள் காலை அது மாறியது - ''ஸ்ரீராமா! உனக்குப் பதின்னான்கு ஆண்டுகள் வனவாசம்!'' இராமபிரான் வந்த நிகழ்வை ஏற்றுக் கொண்டார்! ஆனால், இலக்குவன் ஆதிசேடனாகச் சீறினான்! சினந்தான்! அப்பொழுது சாந்தமாக இராமர் இலக்குவனிடம் 'இது தசரதர் பிழையோ, கைகேயி-பரதன் பிழையோ அல்ல! எதை நோக்கி உனக்குக் கோபம் எழுகிறது? மாற வேண்டியது உன் மனோபாவமே' என்றார்.

**'நதியின் பிழை அன்று நறும் புனல் இன்மை அற்றே**
**பதியின் பிழை அன்று பயந்து நமைப் புரந்தாள்**
**மதியின் பிழை அன்று மகன் பிழை அன்று மைந்த!**
**விதியின் பிழை நீ இதற்கு என்னை வெகுண்டது?'**

என்றான். முற்பிறப்பு, ஊழ்வினை இரண்டையும் தெள்ளத் தெளிவாக வரையறுத்துக் கூற மானுட அறிவால் இயலாது. ஊழிற் பெருவலியாவுள?' என்று வள்ளுவரும் 'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்'' என்று இளங்கோவடிகளும் 'விதி செய்யும் விளைவினுக்கே இங்கு வேறு செய்வார் புவி மீது உளரோ?'' என்று பாரதியாரும் கூறுகின்றனர். பூலோக குபேரராக வாழ்ந்த பட்டினத்தடிகள் அனைத்தையும் துறந்து கோவணாண்டியாகத் திரிந்தார்.

பிள்ளையார் கோயில் ஒன்றில், யோக நிஷ்டையில் தன்னை மறந்த நிலையில் அமர்ந்திருந்தார். அப்போது அரசர் மாளிகையில் புகுந்து பொருட்களைத் திருடிய கள்வர் கூட்டத்தினர் அப்பிள்ளையார் கோயிலில் நள்ளிரவில் சற்று நேரம் அமர்ந்து திருடிய நகைகளைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## ரயில் சேவை மீண்டும் வழமைக்கு




(கொழும்பு)

கல்கிஸையில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணிக்கும் குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில்சேவை இன்று முதல் வாரநாட்களில் முன்னெடுக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கல்கிஸையில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணிக்கும் கடுகதி ரயில்சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த கடுகதி ரயில்சேவை இன்று முதல் வாரநாட்களிலும் வழமைபோல் முன்னெடுக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (2)

## மத்திய கிழக்கிலிருந்து 472 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து நேற்று மொத்தம் 472 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2)

## காட்டு யானை தாக்கி மாணவன் உயிரிழப்பு

(கொழும்பு)

கிருந்துருகோட்டை பகுதியில் காட்டு யானை தாக்கியதில் மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று இரவு இடம்பெற்றுள்ள குறித்த சம்பவத்தில் 16 வயதுடைய மாணவர் ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சம்பவம் குறித்து மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 70-80 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 140 | 200 |
| தக்காளி | 150 | 180 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 110 | 80 |
| கோவா | 130 | 140 | 130 | 150 |
| கரட் | 80 | 180 | 160 | 200 |
| பூசணி | 120 | 100 | 120 | 140 |
| புடோல் | 70 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 130 | 140 | 140 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 140 | 150 |
| பாகற்காய் | 200 | 260 | 220 | 250 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 180 | 180 | 140 | 160 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 | 80 |
| பீற்றூட் | 100 | 90 | 90 | 100 |
| கறிமிளகாய் | 350 | 340 | 280 | 320 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 300 | 160 |
| போஞ்சி | 280 | 320 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | - | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70-80 | 60-80 |
| இராசவள்ளி | - | -- | - | — |
| வெங்காயப்பூ | 240 | 240 | - | 240 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 80 | - | 100 |




## தங்கத் தூண்டில்

ஒரு ஊரில் ரமேஷ், சுரேஷ் அண்ணன், தம்பிகள் இருந்தார்கள். அவர்கள் இரண்டு பேரும் மீன்பிடித்து வாழ்க்கை நடத்தினார்கள்.

ஒருநாள் மதியம் அவர்கள் சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போது பிச்சைக்காரன் ஒருத்தன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அந்த பிச்சைக்காரன் அவர்களிடம் சாப்பிட்டு நான்கு நாளாகி விட்டது. பசிக்கிறது. ஏதாவது தாருங்கள் என்று கேட்டான்.

ரமேஷ் அவனுக்குக் கொஞ்சம் சாப்பாட்டை எடுத்து தந்தான். இதைப் பார்த்த சுரேஷ், அண்ணா இதுபோல சோம்பேறிகளிடம் இரக்கம் காட்டாதே என்று தடுத்தான்.


அதைக் கேட்காமல் ரமேஷ் சாப்பாட்டைக் கொடுத்தான். அடுத்த நாளும் அதே போல சாப்பிடும் நேரத்தில் பிச்சைக்காரன் வந்தான்.

திரும்பவும் வந்ததனால் சுரேஷுக்கு கோபம் வந்து டேய்! சோம்பேறி பையா! அடுத்த முறை உன்னை இங்கே பார்த்தால் தொலைத்து விடுவேன் என்று கத்தினான்.

மூன்றாவது நாளும் பிச்சை கேட்டு அங்கே வந்தான். அவனைப் பார்த்த கோபத்தில் சுரேஷ் அங்கிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக்கொண்டு அவனை ஏரிக்கரைக்கு அழைத்து வந்தான்.

இப்படி பிச்சை எடுக்கிறாயே இதெல்லாம் ஒரு பிழைப்பா? உனக்கு மீன்பிடிக்க கற்றுத் தருகிறேன்.

இந்தத் தூண்டிலை வைத்து பிழைத்துக்கொள் என்று சொல்லி மீன்பிடிப்பது எப்படி என்று கற்றுக் கொடுத்துவிட்டுப் போய் விட்டான்.



பல நாட்களாக அந்தப் பிச்சைக்காரன் வரவே இல்லை. அவனை மறந்து போய்விட்டார்கள்.

ஒருநாள் ரமேஷும், சுரேஷும் டிவி பார்த்துக் கொண்டு இருக்கும் போது ஒரு அழகான குதிரை வண்டியில் ஒருத்தர் வந்தார்.

அவர் கையில தங்கத்தால் செய்த தூண்டில் ஒன்று இருந்தது. ரமேஷும், சுரேஷும் அவரைப் பார்த்தார்கள்.

தங்கத் தூண்டிலை எனது பரிசாக வைத்துக்கொள் என்று சுரேஷிடம் கொடுத்தார்.

தன் வீட்டுக்கு வந்த பிச்சைக்காரன்தான் இவன் என்று ரமேஷுக்கு தெரிந்தது. அவனுக்கு சரியான கோபம். நீ சாகப் பிழைக்க இருந்த போது உனக்கு சாப்பாடு கொடுத்து காப்பாற்றியது நான். எனக்குத்தா்ன் இந்தத் தங்கத் தூண்டிலை தர வேண்டும். எனக்குத் தா என்று கத்தினான். ஆனால், அவரோ, இது உங்கள் தம்பிக்குத்தான் சேர வேண்டும் என்று சொன்னார்.

இதை ரமேஷ் கேட்காமல் வழக்கை நீதிமன்றுக்குக் கொண்டு போனான். நடந்ததை எல்லாம் விசாரித்தார் நீதிபதி.

ரமேஷைப் பார்த்து, நீ இவருக்கு சாப்பாடு கொடுத்து உயிரைக் காப்பாற்றியது உண்மைதான். ஆனால், உன் தம்பியோ இவர் வாழ்வதற்கு வழிகாட்டினார்.

அதைப் பயன்படுத்தி இவர் பெரிய பணக்காரராகி விட்டார். நிலையான உதவி செய்த சுரேஷுக்கு இவர் தூண்டிலை பரிசாகக் கொடுத்தது சரிதான். இந்தத் தங்கத் தூண்டில் சுரேஷுக்குத்தான் என்று தீர்ப்பு! வழங்கப்பட்டது.

**நீதி :**

**நாம் செய்யும் உதவி அப்போதைக்கு கஷ்டம் தீர்ந்தால் மட்டும் போதாது, எப்போதும் கஷ்டம் வராதபடி உதவி செய்தல் வேண்டும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்

தஞ்சைக் கோயிலைக் கட்டிய தலைமை சிற்பிக்கும் 1600 பணியாளர்களுக்கும் அவர்களுக்குக் கீழ்நிலை பணியாளராக இருந்த ஒரு சிகை அலங்காரத் தொழிலாளிக்கும் ராஜராஜன் என்கிற தன் பெயரையே பட்டமாக அளித்து, அவர்கள் பெயர்களைக் கல்வெட்டில் பொறித்தார் ராஜராஜன். அவருடைய விசால மனத்துக்கு இதைவிடவும் ஒரு சான்று தேவையில்லை.

**ஸ்ரீவிமானம்**
**(கோபுரம்)**

கல்லில் பெரிய விமானம் எழுப்புவது மட்டுமல்ல அது கட்டுமான உறுதியோடு இருக்க வேண்டும் என்பதில் கட்டடக் கலைஞர்கள் அதிக கவனத்துடன் இருந்திருக்கிறார்கள்.


65

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

கருவறையில் உள்ள சிவலிங்கம் மிகப்பெரிய சிவலிங்கங்களில் ஒன்று. ஆறடி உயரமும் 54 அடி சுற்றளவும் கொண்ட ஆவுடையார் 13 அடி உயரமும் 23 அரை அடி சுற்றளவும் உள்ள லிங்கம். அது தனித்தனிக் கருங்கற்களினால் செதுக்கப்பட்டுப் பின் இணைக்கப்பட்டுள்ளது.

சிவலிங்கத்துக்கு மேலேயுள்ள பிற்காலத்தில் அமைக்கப்பட்ட விதானம் மரத்தாலானது. விமானம் உட்புறம் கூடாரு அமைந்திருப்பதால் இருண்ட பகுதிக்குள் [illegible]வால்கள் அடைந்துகொண்டு லிங்கத்தின் மேல் அசிங்கம் செய்துவந்த காரணத்தால் இப்போது மர அடைப்பு வசதி செய்யப்பட்டுள்ளது. அதனைச் சுற்றி நான்கு புறமும் வாயில்களுடனும் ஓர் சுற்று அறையுடனும் திகழ்கின்றது.

உள் அறையின் நான்கு சுவர்களும் 11 அடி அகலக் கருங்கல் சுவர் கொண்டது. இதையடுத்து ஆறடி அகலத்தில் சுற்று அறை உள்ளது. இதைச் சுற்றியிருக்கும் வெளிச்சுவர் 13 அடி அகலமுடையது.

கனமான கட்டுமானங்களைத் தாங்குவதற்காக அடிப்பீடம் இரண்டு அடுக்குகளாகக் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கனம் தான் உட்கூடு உடைய விமானத்தைத் தாங்கி நிற்கிறது.

இக்கோயிலைப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ அறிவித்ததற்கான காரணங்கள் ஒன்று கருவறைக்கு மேலே உயரமான விமானம் அமைத்தது மாறுபட்ட அமைப்பாக இருக்கிறது. மற்ற கோயில்களில் சுற்றுக் கோபுரம் பெரியதாகவும் கருவறை கோபுரம் சிறியதாகவும் இருக்கும்.

ஆனால் பெரிய கோயிலில் இது அப்படியே தலைகீழ். இங்கு சுற்றுக் கோபுரங்கள் சிறியதாகவும் கருவறைக்கோபுரம் பெரியதாகவும் அமைந்துள்ளன.

59.40 மீற்றர் என்பதே கோபுரத்தின் திட்டமிட்ட உயரம். ஆரம்பத்தில் இந்த 216 அடி கோயில் விமானம் முழுவதும் செப்புத்தகடுகளைப் போர்த்தி அதன்மேல் பொன் வேய்ந்திருக்கிறார் ராஜராஜன்.

216 அடி விமானம் முழுவதும் தங்கத்தகடு வேய்ந்ததை ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தில் நிகழ்ந்த படையெடுப்புகளில் இந்த விமானத்தில் வேய்ந்த பொன் முழுவதும் சூறையாடப்பட்டு விட்டன.

(தொடரும்)

தீயவனை பிறர் அழிக்க வேண்டியதில்லை.
அவன் தன்னைத் தானே அழித்துக்கொள்கிறான்.
– புத்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பேரினவாதத் தீக்கு விறகடுக்க காலந்தோறும் பிறப்பெடுக்கிறார்

நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் யுகம் தோறும் அவதாரம் எடுப்பேன் என்றார் கீதோபதேசம் செய்த கிருஸ்ண பரமாத்மா.

அதர்மத்தை அழித்து தர்மத்தைக் காப்பதற்காகக் கண்ண பரமாத்மா எடுக்கின்ற அவதாரம் பத்து என்றாயிற்று.

எனினும் அதர்மம் வலிமை பெற்றிருக்கிறதேயன்றி தர்மம் மேலோங்கியதாகத் தெரியவில்லை.

அதிலும் குறிப்பாக, இலங்கையைப் பொறுத்தவரை சிங்களப் பேரினவாதத் தீயை அணைய விடாது எண்ணெய் ஊற்றவும் விறகு அடுக்கவுமென காலந்தோறும் சிங்களப் பேரினவாதிகள் பிறந்து கொண்டே இருப்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

ஆம், எந்தக் காலத்திலும் தமிழ் மக்களுக்கு எதிராகக் கோசம் போடுகின்றவர்கள் பாராளுமன்றத்துக்கு வந்து கொண்டே இருக்கின்றனர்.

தமிழ் அரசியல் தலைவர்களுக்கு எதிராகப் பேசுவதும் தமிழ் மக்களைச் சீண்டுவதுமே இவர்களின் பணியாக இருக்கிறது.

ஒவ்வொரு பாராளுமன்ற ஆட்சியிலும் யாரோ ஒருவர், தமிழ் மக்களைக் கண்டபாட்டில் தூற்றுவதைத் தவறாமல் செய்கின்றார்.

இதனைப் பார்க்கும்போது இந்தப் பொறுப்பை ஆட்சியாளர்கள் சம்பந்தப்பட்டவரிடம் ஒப்படைத்து விடுகின்றனரோ என்றுகூட எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு தமிழ் மக்களை மிகக் கேவலமாகப் பேசுவதே இவர்களின் ஒரே இலக்காக இருக்கிறது.

அந்த வகையில் இலங்கையின் ஒன்பதாவது பாராளுமன்றத்தில் உறுப்பினராக வந்துள்ள அட்மிரல் சரத் வீரசேகர; தமிழ் மக்களைச் சீண்டுவதையும் தமிழ் மக்களுக்கு எதிராகப் பேசுவதையும் தனது தார்மீகப் பணியாகக் கொண்டுள்ளார்.

ஒரு பொறுப்பு வாய்ந்த பாராளுமன்ற உறுப்பினர் என்பதை மறந்து, தமிழினத்துக்கு எதிராகக் கண்டபாட்டில் கதைத்து இனவாதத் தீயை மூட்டி விடுகின்ற இவரின் கொடுஞ் செயலை யாரேனும் கண்டிப்பதாகவும் இல்லை.

அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சரத் வீரசேகர, தமிழ் மக்களுக்கு வரலாறு எதுவும் கிடையாது என்ற பொருள்பட உரையாற்றியிருந்தார்.

இலங்கைத் தீவின் ஆதிக் குடிகளான தமிழ் மக்களின் வரலாறுகளைக் திட்டமிட்டு அழிப்பதும் தமிழர் வரலாற்றைத் திரிவுபடுத்துவதும் வரலாற்றுப் பாடநூல்களில் தமிழர்களின் பூர்வீக வரலாற்றை வெளிப்படுத்தாமல் மகாவம்சத்தை வரலாறாகப் போதிப்பதையும் செய்து கொண்டு, தமிழர்களுக்கு வரலாறு இல்லை என சரத் வீரசேகர கூறுவது மிலேச்சத்தனமானது.

இத்தகைய இனக் குரோதம் ஒருபோதும் இந்த நாட்டுக்கு விமோசனத்தைத் தர மாட்டாது. மாறாக அழிவையே அது தந்து தீரும்.

ஆகையால் இனியேனும் இனவாதம் பேசுவதைத் தவிர்த்து இந்த நாடு அனைவருக்குமானது என்ற நினைப்போடு பேசுவதே நன்மை தரும்.

# மாணவர்களின் போசணை மட்டத்தை மேம்படுத்துவதற்கு பிரதமர் ஆலோசனை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் போசணை மட்டத்தை மேம்படுத்துவதற்கு தினமும் ஒரு முட்டையை வழங்குவது தொடர்பில் ஆராயுமாறு கல்வி அமைச்சருக்கு அறிவுறுத்தியுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ச நேற்று தெரிவித்தார்.

பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர் மற்றும் முட்டை உற்பத்தியாளர் சங்கத்தினர் ஆகியோரை விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்த போதே பிரதமர் இதனை குறிப்பிட்டார்.

பேக்கரி உற்பத்திகளில் முட்டை விலை தாக்கம் செலுத்தும் விதம் குறித்து பேக்கரி உரிமையாளர்களின் சங்கத்தினர் பிரதமருக்கு தெளிவுபடுத்தியதுடன், முட்டை உற்பத்தியில் ஏற்படும் அதிக செலவினங்கள் தொடர்பில் முட்டை உற்பத்தியாளர்கள் விளக்கமளித்தனர்.

நாட்டின் அனைத்து பேக்கரி உற்பத்தி நிறுவனங்களுக்கும் நிலையான மொத்த விலைக்கு முட்டையை பெற்றுக்கொடுப்பதற்கு முடியுமானதாக அமையும் என முட்டை உற்பத்தியாளர்களின் சங்கம் குறித்த சந்திப்பின் போது தெரிவித்தது.

அதற்கமைய நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இரு சங்கங்களுக்கும் இடையே ஒரு உடன்பாட்டிற்கு வருமாறு சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுக்கு பிரதமர் அறிவித்தார்.

கோழி குஞ்சு ஒன்றின் விலையை ரூபாய் 175-ரூபாய் 200 இற்கும் இடையே குறைப்பது தொடர்பிலும் முட்டை உற்பத்தியாளர்கள் மற்றும் பேக்கரி உரிமையாளர்களுக்கான உடன்பாடு விடயத்தில் தலையீடு செய்யுமாறும் துறை சார்ந்த அமைச்சர்களுக்கு இச்சந்திப்பின் போது பிரதமர் அறிவுறுத்தினார். (ம-03)

# 20 ஆவது திருத்தத்தினை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## கரு ஜயசூரிய அழைப்பு

(கொழும்பு)

20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு மக்கள் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும், அவ்வாறான நிலைமை காணப்படும் போது ஏன் புதிய அரசியலமைப்புத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது என அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புவதாக நீதியான சமூகத்திற்கான தேசிய அமைப்பின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நீதியான சமூகத்திற்கான தேசிய அமைப்பு கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றை கொண்டுவரும் தேவை இருக்குமாயின் அது குறித்து பௌத்த சங்க சபையினர், எதிரணி அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் உட்பட அனைத்து தரப்பினரின் கருத்துக்களை கேட்டறிய வேண்டும்.

20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் உள்ள சில விடயங்களை ஆளும் கட்சியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களே எதிர்க்கின்றனர்.

இந்த திருத்தச் சட்டம் நாட்டுக்கு பாதிப்பானது என்றால், அனை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார். (ம-03)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** சம்பந்தர்கடையடி, கரவெட்டி, சாமியன் அரசடி, நெல்லியடி கொடிகாமம் வீதி, கிழவிதோட்டம், இந்திர அம்மன் கோவிலடி, தாமரைக்குளத்தடி, கலிகை, வெலிக்கந் தோட்டம், துன்னாலை, யாக்கரு, நுணாவிலிலிருந்து அரசடி வரை, சாவகச்சேரி புகையிரத நிலையம், சாவகச்சேரி நகரம், சங்கத்தானை, சாவகச்சேரி வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்ற கட்டடம், பலாலி வீதி வேம்படி சந்தியிலிருந்து முலவை சந்தி வரை, புகையிரத நிலைய வீதி, மார்டின் வீதி, யாழ். 1 ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் குறுக்கு தெருக்கள், Convent பாடசாலை, பஸ்ரியன் சந்தி, மடம் வீதி, வேம்படி வீதியின் ஒரு பகுதி, மார்டின் வீதியின் ஒரு பகுதி, ஓடக்கரை வீதி, டேவிட் வீதி, சென் பற்றிக்ஸ் வீதி, மவுன் காமல் வீதி, கிறீன் கிறாஸ் விடுதி, யாழ். புகையிரத நிலையம், Dan தொலைக்காட்சி நிலையம், ஹோட்டல் North GATE ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** வவுனியா நகரம் ஒருபகுதி, பஸார் வீதி, முதலாம் குறுக்குத் தெரு, 2ஆம் குறுக்குத் தெரு, இலுப்பையடி, சூசைப் பிள்ளையார்குளம், கொறவப்பொத்தானை வீதி, றம்பைக்குளம், ஹோட்டல் ஓவியா, எஸ்.வி.ஆர். அரிசி ஆலை, இராணி அரிசிஆலை, லங்கா அரிசி ஆலை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், Youth Training Centre, தலைமன்னார் Palmyrah House, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ்தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ்தொழிற்சாலை, கரைசல் Palmyrah House Timex ஆடைத்தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, New Silk Road Aquatic Company ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

கட்டுப்பாடு என்பது சுதந்திரத்திற்கு முரணானது அன்று. சுதந்திரத்தை நியாயமான வழியில் பயன்படுத்திக் கொள்ள உதவுவது அது. -ஸ்ரீ அரவிந்தர்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### சிவபெருமான் அருள் கிடைக்க...




மனத்தூய்மையின்றி ஒருவன் கோயிலுக்குச் சென்றால் அவன் ஏற்கனவே செய்துள்ள பாவங்களுடன் மற்றொரு பாவத்தையும் செய்து வருகிறான் என்று அர்த்தம். ஆகவே அவன்தன்வீட்டை விட்டு கோயிலுக்குப் புறப்படும் போது இருந்ததை விட இன்னும் இழிந்த நிலையில் தான் ஆலயத்தினின்றும் வீட்டிற்குப் புறப்படுகிறான். இது போல புண்ணிய தீர்த்தங்களில் புரியும் பாவத்தைப் போக்க வழியேதும் இல்லை.

எல்லாவித வழிபாட்டின் எண்ணமே தூய உள்ளத்துடன் பிறருக்கு நன்மைபுரிவதுதான். ஏழை எளிய மக்கள், நோயுற்ற மக்கள் இவர்களிலே சிவத்தைக் காண்பதுதான் உண்மையான சிவ வழிபாடு. விக்கிரகங்களிலேயே மட்டும் சிவனைக் காண முயல்வது வழிபாட்டின் பூர்வாங்கமேயாகும். கோயிலில் மட்டும் சிவத்தைக் காண்பவரைக் காட்டிலும் சாதி, மத மற்றும் யாதொரு பேதமும் இன்றி ஓர் ஏழை மனிதனிடம் கடவுளைக் கண்டு அவனுக்கு சேவை செய்து உதவி புரிகின்றவன்தான் சிவபெருமானின் இன்னருளைப் பெறமுடியும்.

சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புகிறவன் அவருடைய படைப்புக்களாகிய உலகத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் சேவை செய்ய முற்பட வேண்டும். சிவனடியார்களுக்குச் செய்யும் சேவைதான் சிவபெருமானுக்குச் செய்யும் சிறந்த சேவை என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

# றஜீவ், கிஷாந் அதிரடி ஆட்டம்

## யாழ்.சென்றல் அணி அரையிறுதிக்கு தெரிவு



யாழ்.கிரிக்கெட் சம்பியன்ஸ் - 2020 தொடரில் முதலாவது கால் இறுதி ஆட்டம் கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமையன்று மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் யாழ்.சென்றல் அணி, மானிப்பாய் பரீஸ் அணியை ஒரு விக்கெட்டினால் வெற்றிபெற்று அரை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 34.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

ஒரு போட்டியில் துவாரக சீலன் - 53, விநோத் - 26, பானுதன் - 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் யாழ்.சென்றல் அணியின் ஹரி, சபாதிஸ் தலா 2 விக்கெட்டுக்களையும் நிஷான், காவெப், மதூஸன், சலிஸ்ரன் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 27.4 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றனர்.

போட்டியில் றஜீவ் - 35, காவெவ் - 11, நிஷான் - 17, மதூஸன் - 11, கிஷாந் - 29 ஓட்டங்களைப் பெற்றனர்.


களத்தடுப்பில் பரீஸ் அணியின் கிஷோ - 01, தினேஸ் - 02, விநோத் - 02, நிரோஜன் - 04 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.சென்றல் அணி எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமையன்று மகாஜனக் கல்லூரி மைதானத்தில் கே.சி.சி.சி. அணியுடன் அரை இறுதிப் போட்டியில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## நொதேன் பிறீமியர் லீக்-2020

### (வவுனியா)

| காலம் | அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 12.09.2020 | மன்னார் ஹீரோஸ் எதிர் முல்லை பாந்தேர்ஸ்' ஜப்னா கிளாடியேட்டர்ஸ் எதிர் கிளிநொச்சி பைட்டர்ஸ் | UC மைதானம் வவுனியா | 9.45 AM - 1.00 PM 1.45 PM - 5.00 PM |
| 19.09.2020 | வவுனியா சலஞ்சர்ஸ் எதிர் ஜப்னா கிளாடியேட்டர்ஸ் கிளிநொச்சி பைட்டர்ஸ் எதிர் முல்லை பந்தேர்ஸ் | | 9.45 AM - 1.00 PM 1.45 PM - 5.00 PM |
| 20.09.2020 | வவுனியா சலஞ்சர்ஸ் எதிர் கிளாடியேட்டர்ஸ் கிளிநொச்சி பைட்டர்ஸ் எதிர் மன்னார் ஹீரோஸ் | | 9.45 AM - 1.00 PM 1.45 PM - 5.00 PM |
| 26.09.2020 | QUALIFIER ELIMINATOR | | 9.45 AM - 1.00 PM 1.45 PM - 5.00 PM |
| 01.10.2020 | PLAY OFF | | 9.45 AM - 1.00 PM |
| 04.10.2020 | FINAL | | 9.45 AM - 1.00 PM |




# நொதேன் பிறீமியர் லீக் - 2K20

## கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகள்



- நோர்த் சுப்பீரியர்ஸ் எதிர் யாழ்.எரோஸ்.
- யாழ்.எரோஸ் - 90/5.
- நோர்த் சுப்பீரியர்ஸ் - 93/6.
- நோர்த் சுப்பீரியர்ஸ் 4 விக்கெட்டுக்கள் வெற்றி.
- ஆட்ட நாயகன் - சரண்ராஜ் - 44 ஓட்டங்கள்.



- நோர்த் சுப்பீரியர்ஸ் எதிர் வட ஸ்ரைக்கர்ஸ்.
- வட ஸ்ரைக்கர்ஸ் - 39/10.
- நோர்த் சுப்பீரியர்ஸ் - 42/2
- நோர்த் சுப்பீரியர்ஸ் 8 விக்கெட்டுகளால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - சுஜீந்தன் - 4 விக்கெட்டுகள்.



- இணுவில் யுனைடெட் ஸ்ரார்ஸ் எதிர் கொக்குவில் ஸ்ரார்ஸ்.
- கொக்குவில் ஸ்ரார்ஸ் - 81/9.
- இணுவில் யுனைடெட் - 82/5.
- இணுவில் யுனைடெட் 5 விக்கெட்டுகளால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - ரகுபதி - 36 ஓட்டங்கள்.



- யாழ்.அரோஸ் எதிர் கிப் கோப்ராஸ் ஜப்னா.
- யாழ்.அரோஸ் - 81/10.
- கிப் கோப்ராஸ் - 43/8.
- யாழ்.அரோஸ் 38 ஓட்டங்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - அமல் - 2 விக்கெட்டுகள்.

## வீடொன்றுக்குள்...

பட்டிருந்த இரு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தளபாடங்களைத் தீயிட்டு கொளுத்தியது டன், வீட்டிலிருந்த பொருட்களையும் கதவையும் உடைத்து சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 1.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அதிகாலை அனைவரும் உறக்கத்தில் இருந்த வேளையில் இனந்தெரியாத குழுவொன்றினால் குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களுக்கு தீ வைத்த போதிலும் ஒரு மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

மற்றைய மோட்டார் சைக்கிள் சிறியளவில் எரிந்துள்ளது. மோட்டார் சைக்கிள்களுக்கு தீ வைத்ததன் காரணமாக வீடு முழுவதும் தீ பரவி வீட்டிலிருந்த தளபாடங்களும் எரிந்து நாசமாகியுள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்டமைக்கான காரணம் இதுவரை தெரியாத நிலையில் இவ்விடயம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,8)

## குண்டுச் சத்தங்...

பின்னர் யாழ்ப்பாண நகரம், வலிகாமம் தென்மேற்கு, தீவகப் பகுதிகளில் இந்த தொடர் குண்டு சத்தங்களை கேட்க முடிந்தது. பெரும் சத்தத்தில் குண்டுகள் - குறிப்பிட்ட நேரத்திற்கு வெடித்தது.

இதனால் சில பகுதிகளில் வீடுகளில் அதிர்வை உணர்ந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண பகுதிகளில் அவ்வப்போது கைப்பற்றப்பட்ட வெடிபொருட்கள் மற்றும் இராணுவத்தின் களஞ்சியசாலைகளில் இருந்த அகற்றப்பட வேண்டிய வெடிபொருட்களே வெடிக்க வைக்கப்பட்டுள்ளன.

எனவே இது தொடர்பில் யாழ்.மக்கள் அச்சம் அடையத் தேவையில்லை என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்ரமசிங்க தெரிவித்தார். (ம-3,8)

## அரச காணியில்...

கிய அதி சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் காணி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. (ம-3)

(இது தொடர்பான செய்தி உள்ளே)

## சிங்கள தேசிய...

திருத்தம் செய்ய வேண்டுமே தவிர இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர்களுக்குச் சாதகமாக அமையும் விதத்தில் ஏற்பாடுகள் கொண்டுவரக்கூடாது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில் ஏற்றுக்கொள்ளக் கூடிய பல விடயங்கள் காணப்பட்டாலும், புறக்கணிக்கும் பல ஏற்பாடுகளும் காணப்படுகின்றன" என்றார். (ம-3)

## கட்டாயம் நடத்தப்...

ளார்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமா என கதிர்காமத்தில் வைத்து கோதாகொட பிரதமரிடம் கேட்டுள்ளதுடன் அதற்கு பதிலளித்துள்ள பிரதமர் மாகாண சபைத் தேர்தல் கட்டாயம் நடத்தப்படும் எனவும் அதில் எந்த பிரச்சினையும் இல்லை எனவும் கூறியுள்ளார்.

மாகாண சபைகள் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் வெளியானாலும் அவை அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல எனவும் பிரதமர் இதன்போது கூறியுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர மாத்திரமல்லாது ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக யுத்துகம அமைப்பின் தலைவர் கெவிந்து குமாரதுங்கவும் மாகாண சபை முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கடும் நிலைப்பாட்டில் இருந்து வருகின்றனர். (ம-3)

## வாள்வெட்டு...

ளது.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் நுழைந்த வாள்வெட்டுக் குழு வன்முறையாளர்கள் வீட்டின் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக கூறப்படுகின்றது. (ம-3)

## பதவியைத் துறந்...

கட்சி அவரை தூக்கியெறியும் என்ற நிலைமை தென்பட்டதையடுத்து, அவராக பதவி விலகியுள்ளார் என்று கூறப்படுகிறது.

இருப்பினும், அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,தன் தனிப்பட்ட விடயங்கள் தொடர்பாகவே தான் பதவியைத் துறப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

நான் கடந்த 2014ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளராகச் செயற்பட்டு வந்துள்ளேன்.

எனது செயற்பாடுகளுக்கு சகல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கிய உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நிலையில், என்னுடைய தனிப்பட்ட காரணங்களுக்காக இப்பதவியை தொடர்ந்தும் வகிக்க முடியாதுள்ளேன் என்பதனைத் தெரிவித்துக் கொள்வதோடு, நான் இப்பதவியை இன்றிலிருந்து துறக்கின்றேன் என்பதனையும் தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

எனவே, எனது இப்பதவி துறப்பை ஏற்றுக் கொண்டு இது தொடர்பான ஏனைய விடயங்களை உரியவாறு கையாளுமாறு தங்களை மிக அன்புடன் வேண்டுகின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## நீதியைச் செயற்...

வித்துள்ளார்.

இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பான அறிக்கையை, வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிப்பதற்காக கையளித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு ஆய்வுகளைச் செய்ததன் அடிப்படையில் ஐ.நாவின் முன்னாள் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரீப் இந்த அறிக்கையை சமர்பித்துள்ளார்.

இந்த அறிக்கையில் நிலைமாறுகால நீதி திட்டத்துக்கு இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு கிடைக் காமை தவிர வேறெந்த தடைகளும் இல்லை என்று ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிறீப் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் நிலைமாறுகால நீதியை செயற்படுத்துவதை தாமதித்து, அதில் முழுமையாகத் தோல்வியடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## ஏமா...

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று மதியம் கரணவாய் மத்திய பகுதியிலுள்ள தனிமையில் வசித்து வந்த தங்கவேலாயுதம் சின்னத்தங்கம் என்பவர் வீட்டிலேயே இடம்பெற்றது.

நேற்று மதியம் குறித்த வீட்டிற்குச் சென்ற மீன் வியாபாரி குறித்த வயோதிப பெண்ணிடம் நீண்ட நேரம் கதைத்து ஏமாற்றி 1.5 பவுண் நிறையுடைய 2 மோதிரத்தையும் 2 ஆயிரம் ரூபாய் பணத்தையும் அபேஸ் பண்ணிக் கொண்டு தலைமறைவாகி விட்டார்.

இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாருக்கு முறையிட்டதைத் தொடர்ந்து பொலிஸார் தீவிர விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (ம-3)

## கோண்டாவிலில்...

குற்றச்சாட்டில் ஐந்து பேர் பொலிஸாரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து கோப்பாய் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் கோண்டாவில் மேற்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்று சோதனையிடப் பட்டது.

இதன்போது குறித்த வீட்டில் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் வீட்டில் இருந்த ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

மெகா பவர்
திகதி 11/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0609
B 09 18 22 25 65

நீரோகா
திகதி 11/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0702
லக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 03 10 27 68

மஹஜன சம்பத
திகதி 2020/09/11
சீட்டிழுப்பு இலக்கம் 4242
V 9 0 9 6 9 6

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 11-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2537
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 18 19 22 35

தன நிதானய
திகதி -2020.09.11
சீட்டிழுப்பு இலக்கம் - 314
T 01 20 22 32

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1212
நிறம் இளம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 11.09.2020
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
Z 38 41 55 59
55,510,608.40
SUPER 500 3 2 5 1

Y 03 23 45 73
சீட்டிழுப்பு வாரம் 623
பச்சை
11.09 2020
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,180,605
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1038
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி 2020.09.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 68,873,630/-
வெற்றி இலக்கங்கள் 21 25 50 56 A
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 7291
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 494
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.09.11
சீட்டிழுப்பு இல. : 3368
வர்ணம் : ஆரஞ்சு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ.40,320,536.50
வெற்றி இலக்கங்கள் 34 59 63 74 M
ரூ.500/- பரிசுக்கான விசேட இலக்கம் 4727
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 11.09.2020
வெற்றி வாரம் 2919
வர்ணம் கருநீலம்
வெற்றி இலக்கங்கள் 01 29 44 48
விருச்சிகம்
ரூ.500 பரிசுக்குரிய 7520
ரூ.100 பரிசுக்குரிய 808
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,825,300
தொ. பே. : 0112 333 546/47
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## நாங்கள் கள்ளத் தோணிகள் அல்ல

# இலங்கையின் மூத்தகுடி தமிழரே என நிரூபிக்க என்னால் முடியும்

## சிங்கள ஊடகத்துக்கு விக்னேஸ்வரன் செவ்வி



(கொழும்பு)

**நாங்கள் கள்ளத் தோணிகளில் வந்தவர்கள் அல்ல. தமிழர்களே இலங்கையின் மூத்த குடிகள் என நிரூபிக்கக் கூடிய ஆதாரங்கள் என்னிடமுள்ளது என சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல அறிஞர்களுடன் கலந்துரையாடி, புத்தகங்களினை படித்து ஆய்வு செய்தே பாராளுமன்றத்தில் நிலவுரிமை குறித்துப் பேசினேன். இலங்கையின் ஆதிக்குடி மக்கள் பேசியது தமிழ் மொழிதான் என நிரூபிக்க என்னிடம் ஆதாரங்கள் உண்டு. கள்ளத்தோணிகள் நாமல்ல. நீங்கள் எம்மைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும்.

பாதுகாப்பு வலயம் என்று கூறப்பட்ட முள்ளிவாய்க்காலில் தான் அதிகளவிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். எமக்கு இழைக்கப்பட்ட அநீதியை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவே நான் எனது முதலாவது பாராளுமன்ற அமர்வின் போது முள்ளிவாய்க்கால் நினைவிடத்திற்குச் சென்றிருந்தேன்.

வன்னியில் இருந்தவர்கள் ஒருபோதும் பயங்கரவாதிகள் அல்ல. அனைவரும் அப்பாவிப் பொதுமக்களே. வயதானவர்கள் பாராளுமன்றத்திற்கு சென்று என்ன செய்தார்கள் என கேள்வி எழுப்பப்படுகிறது.

இளைஞர்கள் இவ்வளவு காலமும் பாராளுமன்றம் சென்று என்ன செய்தார்கள்?

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து பயணிப்பது தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் அண்மையில் என்னிடம் பேசியிருந்தார். நான் அவருக்கு பதிலளிக்கையில் தீர்வு என்று ஒன்றுக்குள் கட்சி இறங்கும் போது அனைவரும் ஒன்றிணைவோம் என்று கூறினேன். (ம-03)

## கொரோனா நேற்று எழுவர்

(கொழும்பு)

இலங்கையில் நேற்று மேலும் 7 பேருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 162 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் 5 பேர் மாலைதீவில் இருந்து நாடு திரும்பியவர்கள் என கூறப்பட்டுள்ளது. (ம-03)


விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
DHL
(C-112)
0768226240

மணமகன் தேவை
89, உத்தரம் 1, 8 இல் செவ்வாய் வீரசைவம் மணமகளிற்கு மணமகன் தேவை. (3862)
துர்க்கா திருமண சேவை
077 818 5978
075 011 1122

மணமகள் தேவை
உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
(3859)
தொடர்பு : 077 979 0899

WIN REPAIR
இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி எமது நிறுவனம் வாடிக்கையாளர்களாகிய உங்கள் வீட்டிற்கே வந்து சகலவிதமான குளிர்சாதனப் பெட்டி களையும், A/C களையும் மிகக் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் திருத்தித் தருகின்றோம்.
முதலில் தொடர்பு கொள்ளும் 50 வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பரிசில்களும் வழங்கப்படும். (3863)
077 964 8942
077 841 1314

BIOLOGY SEMINAR
Royal வினாத்தாள் - சனி
12.09.2020 காலை 9.00 மணி
Visaka வினாத்தாள் - ஞாயிறு
13.09.2020 காலை 9.00 மணி
SCIENCE CORNER - யாழ்.
பிரவேசம் : ரூபா 500/=
Tel : 077 665 5290
(C-295)

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
2020 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கான....
மாபெரும் விசேட செயலமர்வு
8.30AM - 2.30PM (C-278)
செப்ரம்பர் 12,13,14 தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
செப்ரம்பர் 19,20,21 ICT, கணிதம்(7) விவசாய விஞ்ஞானம் ஊடக்கல்வி, புவியியல்
இம்முறை COVID - 19 தாக்கத்தால் இழந்த கல்வியை ஈடுசெய்யும் வகையில்
அனைத்துப் பாடங்களுக்கும் இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
பாடப்பரப்புக்கள் அனைத்தும் துரித மீட்டல் செய்யப்படும்.
புதிய மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
சிரமமின்றி கைபேறுகளைப் பெற்றுக்கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.
முற்பதிவுகளுக்கு:- 077 248 7774 / 021 221 7860

மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம். 1988ஆம் ஆண்டு பிறந்த கிரகபாவம் 92, திருவாதிரை, ஆசிரியத் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
(C-286)
தொடர்பு : 077 672 3799

கனேடிய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கற்கை நிலையம்
HOTEL MANAGEMENT
திறமையை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச அங்கீகாரம்
◆ 100% வெளிநாடு செல்லும் வாய்ப்பு
◆ 6 மாத பயிற்சி முடிவில் அரச அங்கீகார சான்றிதழ்
◆ 100% வேலை வாய்ப்பு
◆ 15 நபர்கள் மட்டுமே ஒரு அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்
ஆரம்பம் : 27.09.2020
தொடர்புகளுக்கு :- 076 057 9999
(C-297)

பௌதிகவியல்
விஷேட கருத்தரங்கு A/L - 2020
வன்னி மண்ணில் முதன்முறையாக
வளவாளர்
S.R. ஜெயக்குமார்
(கொழும்பு பிரபல பௌதிகவியல் ஆசிரியர், முன்னை நாள் கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர்)
(C-296)
இவ்வருட எதிர்பார்க்கை அமைப்புக் கட்டுரை, கட்டுரை வினாக்களுடன் 50 மாதிரி MCQ கேள்விகள்.
காலம் :- 14.09.2020 (திங்கட்கிழமை)
இடம் :- கிளி/ கூட்டுறவு மண்டபம் (டிப்போ சந்தி அருகாமை)
நேரம் :- காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை
வரையறுக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையுடன் நடைபெற இருப்பதனால் அனுமதிக்கு முந்தவும்.
அனுமதிகளை SCIENCE PATH KILINOCHCHI கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : 077 678 9383, 076 164 0336
வெளிமாவட்ட மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
நுழைவுக் கட்டணம் 1000/-

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
O/L
பிரிவு 2 DAY CLASS
ஆரம்பம் : 14.09.2020 ( 8.00 a.m to 2.00 p.m )
◇ தனித்துவமான ஆசிரியர் குழாம்.
◇ கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒரே நிறுவனம்.
◇ அலகு ரீதியான மீட்டலுடன் மாதாந்தப் பரீட்சையும் நடைபெறும்.
◇ அனுமதிகள் வரையறுக்கப்பட்டதால் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
◇ முழுமையாக பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும்.
(C-286)
Tel : 076 482 4490

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.